உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39] சித்தார்த்தி ஆண்டு தைத்திங்கள் 10—2—80 [இதழ் 3

கும்பகோணம்

அருள்மிகு

ஆதிகும்பேசுரர்

திருக்கோயில்

இராசகோபுரம்

மகாமகம் :-

–3–1980

சனிக்கிழமை



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

" ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 || 10—2—80 || இதழ் 3

உட்பொருள்

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

ஆலந் தரித்தலிங்கம்
ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும்
முளைத்தலிங்கம்—பாலொளியாம்
மத்தனே கூடல்
மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவாயா.

—சொக்கநாத வெண்பா. 61

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்.

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ, 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ, 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 39 | சித்தார்த்தி - தை - 10—2—80 | இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

மகாமகநீராடுங்கள்

" ஏவிஇடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
இப்பிறவி அறுத்தேற வாங்கி ஆங்கே
கூவிஅம ருலகனைத்தும் உருவிப் போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதல் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெம் கூத்தனாரே "

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

தீர்த்தநீராடல் :

நாள்தோறும் விடியலில் நீராடி இறைவழிபாடு முதலிய நற்காரியங்களைச் செய்வது இந்துசமய மக்களின் மரபு. நீராடுதல் உடலைத் தூய்மையாக்கி உள்ளத்தையும் தெளிவுபெறச்செய்கிறது.

விழாநாட்களில் தீர்த்தநீராடல் தெளிவுபெற்ற உள்ளத்தில் இறையுணர்வைத் தோற்றுவித்து இறையருளைப்பெறத் துணைசெய்கிறது. தீர்த்தம் புனிதத்தன்மையுடையது. இறைவன் தீர்த்தவடிவமாகவும் விளங்கி நீராடுபவர்க்கு நலம்பல அளித்தருள்கின்றான். 'சென்றாடும் தீர்த்தங்கள் ஆனார்தாமே' 'ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்' என்றெல்லாம் திருமுறைகள் குறிக்கின்றன. தீர்த்தங்களைச் சிவசக்திகளின் வடிவமாக எண்ணித் திருவருளாகிய தீர்த்தத்தில் மூழ்குகிறோம் என்ற உணர்வுடன் நீராடவேண்டும். இத்தகைய தீர்த்தங்களுள் குடந்தை மகாமகதீர்த்தம் மிக்க சிறப்புடையது.

மகோதயம், அர்த்தோதயம் :

மகோதயம், அர்த்தோதயம், கும்பமேளா போன்ற புண்ணிய காலங்களில் கடல்களிலும் புண்ணிய நதிகளிலும் மக்கள் இறையுணர்வோடு நீராடி நலம்பலபெறுகின்றனர். இவ்விழாக்களெல்லாம் கிரகம், இராசி, திதி, நக்ஷத்திரம், கரணம் ஆகியவைகளின் சேர்க்கைகளைக் கொண்டே கணக்கிடப்படுகின்றன.

தை அல்லது மாசி மாதத்தில் அமாவாசையன்று, வியதீபாதம் திருவோணம் இவை இரண்டும், திங்கட்கிழமை அல்லது புதன் கிழமையில் உதயகாலத்தில் இருந்தால் அந்நாள் மகோதயபுண்ணிய காலம் என்றும், ஞாயிறன்று இவை கூடினால் அர்த்தோதயபுண்ணிய காலம் என்றும் சொல்லப்படுகிறது.

புஷ்யே மாகேஷு அமாவாஸ்யா பாதயோ ச்ரவணே யதி ।
ஸோமே ஸௌம்யவாரேச மஹோதய யதாவிதி ॥
மாகே இந்து க்ஷயே கால்யே அர்க்கவாரே அர்தஏவ ஸ: ।

என்று காலவிதானநூல் விளக்கந்தருகிறது.

கும்பமேளா :

வடநாட்டில் பல இடங்களில் வெவ்வேறு மாதங்களில் நிகழும் கும்பமேளாவும் கிரக – ராசி சேர்க்கையைக்கொண்டு கணக்கிடப்படுகிறது. அரித்துவாரத்தில் மேஷராசியில் சூரியனும் சந்திரனும் கும்பத்தில் குருவும் இருக்கும்போது கும்பமேளா கொண்டாடப்படுகிறது. மேஷத்தில் சூரியனும் சந்திரனும் இருந்தாலும் சிம்மராசியில் குரு இருக்கும்போதுதான் நாசிக் க்ஷேத்திரத்தில் கொண்டாடப்பெறுகிறது. சூரியன், சந்திரன், குரு இம்மூன்று கிரகங்களும் துலா ராசியில் இருக்கும்போது உஜ்ஜயினியில் கொண்டாடப்படுகிறது.

மாகமாதத்தில் சூரியனும் சந்திரனும் மகரத்திலிருக்கும்போது பிரயாகையில் இவ்விழா நிகழுகிறது. இந்நான்கு இடங்களிலும் அமாவாசையில் நடைபெறுகிறது. குரு ராசிக்கு ஓராண்டாகச் சுற்றி வரப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆவதால் அரித்துவார் முதலிய ஒவ்வொரு இடங்களிலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்விழா நிகழ்கிறது.

சில கிரகங்களின் சேர்க்கையினுல் பூமியும் பூமியிலுள்ள நீரும் மாற்றம்பெற்று உடல்நலம் பயக்கும் ஒரு தனிச்சக்தியைப் பெறுகிறது என்று அறிவியலார் கூறுவதும் சிந்தனைக்குரியதாகும். ஆகவே அந்தந்தநாளில் நீராடுதலால் உடல்நலமும் உளநலமும் உண்டா கின்றன.

மகாமகம் :

பொதுவாக ஆண்டுதோறும் மாசி (மாக) மாதம் முழுதும் விடியலில் தீர்த்தநீராடல் புண்ணியம் பயப்பதாகும். துலாஸ்நானம் போல இது மாகஸ்நானம் எனப்படும். அதிலும் மகநட்சத்திரம் பௌர்ணமியோடு சேர்ந்துவரும் சிறப்பினைக்கருதி மாசிமாதத்தில் பல திருக்கோயில்களில் மக தீர்த்தவிழா கொண்டாடப்பெறுகின்றது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குரு சிம்மராசிக்குப்பிரவேசம் செய்கிருர். சந்திரனும் இந்த ராசியில் மக நட்சத்திரத்தன்று தங்கி யிருக்கிருர். அதனுல் குரு சந்திர யோகச் சிறப்பு உண்டாகிறது. சூரியன் கும்பராசியில் வீற்றிருக்கிருர். ஒன்றுக்கொன்று ஏழாமிட மாகக் குருவுக்கும் சூரியனுக்கும் பார்வை ஏற்படுகிறது. அப்பார்வை, மக நீராடுபவர்களின் பாவங்களைப் போக்கி உள்ளொளி பெருகச் செய்கிறது. இக்காரணங்களால் பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வரும் மாசிமகம் பெருமை உடைய மகம் அதாவது மகாமகம் எனச் சிறப்பாகப் போற்றப்படுகிறது.

மகாமக தீர்த்தச் சிறப்பு :

மகாமகநாளில் எந்த இடத்திலும் நீராடலாம் என்றுலும் கும்ப கோணத்திலுள்ள மகாமக தீர்த்தத்தில் நீராடுதல் ஒருபெரும் சிறப்பு. தலபுராண வரலாறும் இச்சிறப்பினை அறிவிக்கும். பிரளய காலத்தில் மிதந்து இங்கு வந்த அமுதகும்பம் வேட்டுவ வடிவம்கொண்டுவந்த சிவபெருமானது கை வில்லால் சிதைக்கப்பெற்றபோது கும்பத்தில் உள்ள அமுதத்தின் ஒருபகுதி இவ்விடத்தில் தீர்த்தமாகத் தங்கியது. அதனுல் அமுத தீர்த்தம் எனப் பெயர்பெற்றது. கும்பராசிக்கும் அமுத கும்பத்திற்கும் ஓர் இயைபு உண்டல்லவா? தம்மிடம்

மூழ்கினுரது பாவத்தை அகற்றும் கங்கை யமுனை சரசுவதி முதலிய ஒன்பது புண்ணிய நதிகளும் தாம் பெற்ற அப்பாவத்தை நீக்கிக் கொள்ள, இறைவன் ஆணைப்படி கன்னியர் உருக்கொண்டுவந்து மகாமகநாளில் இதில் மூழ்கி நலம்பலபெற்றனர் ஆதலின் நவகன்னியர் தீர்த்தம் என்ற பெயரும் இதற்கு உண்டு. 'பூமருவு கங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம், மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடும் கோயில்' என்பது சேக்கிழார் சுவாமிகள் வாக்கு. மற்றும் இம்மகாமகதீர்த்தத்தின்கீழ் அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும் திக்குப் பாலகர் பெயரால் அமைந்துள்ள எட்டுத் தீர்த்தங்களும் உள்ளன என்று புராணம் கூறுகிறது. இவ்வண்ணம் சமயத்துறையிலும் சோதிடத்துறையிலும் அறிவியல்துறையிலும் சிறப்புற்றுவிளங்குவது மகாமக தீர்த்தவிழா. அந்நாளில் அனைத்து ஆலயங்களிலுமுள்ள மூர்த்திகள் எழுந்தருளிவந்து தீர்த்தம் கொடுத்தருளும்காட்சி காணுதற்குரியதாகும்.

அடையும்பயன்:

அந்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம், புண்யக்ஷேத்ரே விநச்யதி
புண்யக்ஷேத்ரே க்ருதம்பாபம், வாராணஸ்யாம் விநச்யதி
வாராணஸ்யாம் க்ருதம் பாபம், கும்பகோணே விநச்யதி
கும்பகோணே க்ருதம் பாபம், கும்பகோணே விநச்யதி.

'ஒருவர் செய்த பாவங்கள் புண்ணியத்தலங்களிலுள்ள தீர்த்தங்களில் நீராடினுல் அகலும். அப்புண்ணியத் தலங்களில் இருப்போர் செய்த பாவங்கள் காசி சென்று கங்கையில் நீராடுவதால் அகலும். காசியில் இருப்பவர்கள் செய்த பாவங்கள் கும்பகோணத்தீர்த்தத்தில் நீராடினுல் நீங்கும். கும்பகோணத்திலிருப்பவர்கள் செய்த பாவங்கள் கும்பகோணத்தில் உள்ள தீர்த்தத்தில் நீராடினுல்தான் அகலும் என்று வடமொழிநூல் கூறுவதும் இம்மகாமக தீர்த்தச் சிறப்பை அறிவிக்கிறது.

இத்தீர்த்தத்தில் நீராடுவதாலும், தீர்த்தத்தைவலம்வருவதாலும். தீர்த்தக்கரையில் தானங்கள்செய்வதாலும் அடையக்கூடியபயன்கள் அளவில. உலகிலுள்ள அனைத்துத் தீர்த்தங்களும் இதில் வந்து கலப்பதால் அவைகளில் நீராடும் பயனை மகாமக தீர்த்தம் ஒன்றே தரவல்லதாகும்.

இத்தீர்த்தவிழா நிகழும் சித்தார்த்தி ஆண்டு மாசித்திங்கள் பதினெட்டாம் நாள் (1—3—80) சனிக்கிழமை வருகிறது. அன்பர்கள் அந்நன்னுளில் மகாமக தீர்த்தத்தில் இறையுணர்வோடு நீராடி இறைவனை வழிபட்டு எல்லா நலன்களையும் எய்தி உய்வார்களாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தில்லைத் திருக்கோயிலில் நடைபெற்ற

"கோயில்" நூல் வெளியீட்டு விழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

2—1—80

(சென்ற இதழ் தொடர்ச்சி)

" அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனுர்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே." — அப்பர்.

கேளுங்கள் கொடுக்கப்படும் :

அருளாளர்களின் அனுபவவார்த்தைகளை நாம்கேட்டு அதன்வழி நடக்க முயலுதல் வேண்டும். ஆனல் நம்மில் பலரும் அருளாளர்களின் அருள்வார்த்தைகளையும் கேளாது, தாங்களாகவும் சிந்தித்து உணர்ந்து செயல்படாத துன்புறுகின்றனர்.

" ஏவவும் செய்கலான் தான்தேரான் அவ்வுயிர்
போஒ மளவும்ஓர் நோய் "

என்று வள்ளுவர் கூறுவதற்கேற்ப உலகில் ஓர்நோயாக நாம் இல்லாமல், நல்லோர் கூறுவதைக்கேட்டு வாழ்ந்தால் நன்மையுண்டு. 'கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பதற்கு இறைவன் முன்னின்று நமக்குத் தேவையான உலகியல் பொருள்களைக் கேட்டல் என்பது பொருளில்லை. இறைவனருளிய வேதாகமங்களும், ஆன்றவிந்து அடங்கிய சான்றோர்களும் அருளாளர்களும் சொன்னதைக்கேட்டு அதன்படி நடந்தால் என்பது பொருளாகும். உலகியலிலும்

சொன்னதைக்கேட்கும் பிள்ளைகளுக்குத்தான் பெற்றோர்கள் கருணை பாலிக்கிறார்கள். எனவே அருளாளர்கள் சொன்னதைக்கேட்டால் நமக்கும் நல்லன எல்லாம் கிடைக்கும்.

அருளாளர்கள் வாழ்வு ;

மேலும் அருளாளர்கள் வாழ்வில் சிந்தித்துப்பார்க்கவேண்டியது மற்றும் ஒன்று உண்டு. நம்மில் பலரும் துன்பங்களைக்கண்டு ஏதோ நமக்குத்தான் இவ்வளவு துன்பங்கள் வந்துள்ளன; வேறு யாருக்கும் இவ்வளவு வந்ததில்லை என்று எண்ணுகின்றனர். ஆனால் அது உண்மையல்ல. ஞானசம்பந்தருக்கும் நாவுக்கரசருக்கும் சுந்தரருக்கும் மணிவாசகருக்கும்வந்த துன்பங்களில் சிறிதுகூட நமக்குவந்ததில்லை; வந்தால் நம்மால் பொறுத்துக்கொள்ளவும் முடியாது. நம்மில் யாரையும் நஞ்சு ஊட்டவோ கல்லில் கட்டிக் கடலில் போடவோ இல்லை. அவர்கள் இத்தகைய துன்பங்கள் வந்தபொழுதெல்லாம் துன்புற வில்லை. இறைவன் அவரவர்கள் வினைகளுக்கீடாகவே அருள்பாலிக் கின்றான் என்பதற்கு அருளாளர்களின் வாழ்க்கையும் சான்று பகர் கிறது. வேண்டுதல் வேண்டாமை இலான் இறைவன் ஆதலின் எல்லார்க்கும் பொதுவாகவே அருள் வழங்குகின்றான். அருளாளர்கள் துன்பம் வந்த பொழுதெல்லாம் 'எம்பெருமான் உளன்' என்றும் 'ஆலவாயரன் அருள் முன்னிற்க' என்றும் எண்ணி ஒரே நோக்கில் வாழ்ந்ததால் எத்துன்பங்கள் வந்தபொழுதும் அதிர்ச்சி அடைய வில்லை. சுந்தரருக்குத் பல நேரங்களில் துணைநின்ற பெருமானே சத்தியம் தவறிய குற்றத்திற்காகக் கண்களைக்குருடாக்கினான். ஆனால் சுந்தரர் அதுகண்டு துன்புறாது திருவாரூர்ப் பெருமானை வழிபடப் புறப்பட்ட வேட்கையில் குறைந்துவிடாமலும் திருவொற்றியூருக்குத் திரும்பிச் சென்றுவிடாமலும் ஒரேநோக்கில் புறப்பட்டு வருகிறாரே; அதுதான் அவர்கள் நமக்குக் காட்டும் வழியாகும். இன்னல்களினால் துன்புறுவதுபோல அவர்கள் பாடுவதுகூட உடலைத்தாக்கும் உட லோடாய்க்கழியும் வினைநிலையே தவிர உயிரைப் பாதிப்பதில்லை. ஞானி கள் புற்றுநோய் தமக்கு வந்தபோதும்கூட கலங்காமல் மகிழ்சியாகவே இருந்தனர் என்பது இரமணர் போன்ற பெரியோர்களின் வரலாறு.

அடியார்களைக் காணும் அடையாளம் :

சமயாசாரியர்கள் வரலாற்றில் தனிச்சிறப்பு என்னவெனில், இறைவன் தங்களை முதன்முதலில் ஆட்கொண்டபொழுது என்ன உணர்வும் பக்தியும் ஒருமித்த மனமும் கொண்டிருந்தார்களோ அவற்றில் எள்முனையும் குறையாமலும் மாறாமலும் நிறைவடையும் வரையிலும் வாழ்ந்தார்களே அதுதான். அதற்கு ஆதாரமாக, அவர்கள் பாடிய பாடல்களில் எந்த ஒன்றை எடுத்துப் பார்த்தாலும்

தரம் குறையாமலும் வாழ்த்தும்நிலை மாறாமலும் அப்பாடல் ஒரே நோக்கில் அமைந்து இருப்பதனையே கொள்ளலாம். சுந்தரர் கூட, "இவரலாது இல்லையோ பிரானார்" என்று பாடும்போது 'இவரைத் தவிர தலைவன் இல்லை' என்னும் பொருளில்தான் பாடுகின்றார்.

இத்தகைய குறிப்புக்கள்தாம் அருளாளர்கள் என்பதற்குச் சரியான அடையாளங்களாகும். இந்த உயர்வுகளை உடையோர் கூறுவதே அருள்வாக்கு எனலாம்.

தில்லைப்பெருமை :

இவ்வுயர்வுடையோர் மூவராலும் பாடப்பெற்ற இத்தில்லைப்பதி பலபெருமைகளையும் உடையது. தில்லை என்பது ஒருவகை மரத்தைக் குறிக்கும். இப்பதியில் இம்மரமே தலவிருட்சமாக இருத்தலின் இப்பெயர் பெற்றது. இம்மரம் சிவகங்கையின் வடகரையில் இருப்பதாகத் தெரிகிறது. அதனை, வழிபடும் தலவிருட்சமாக அமைத்தல் சிறப்புடையதாகும். சிதம்பரம் என்ற சொல்லைச் சித் + அம்பரம் என்று பிரிப்பர். சித் என்றால் அறிவு என்றும், அம்பரம் என்றால் ஆகாயம் என்றும் பொருள். அறிவாகாயமாயிருப்பது இத்தலம் என்று கூறலாம். நம் நாட்டில் பஞ்ச பூதத்தலங்கள் என்று ஐந்து இடங்களைக் குறிப்பிடுவர். காஞ்சிபுரத்தைப் பிருதிவித்தலம் என்றும், திருவானைக்காவை அப்புத்தலம் என்றும், திருவண்ணாமலையைச் சோதித்தலம் என்றும், காளத்தியை வாயுத்தலம் என்றும். சிதம்பரம் ஆகிய இத்தலத்தை ஆகாயத்தலம் என்றும் கூறுவர்.

ஆகாயத்திற்கு நிலம் இன்மை போல இத்திருக்கோயிலுக்கும் ஒருகுழிநிலம்கூட இல்லாமல் இருப்பதும் நடராஜா என்பதற்கு ஏற்ப ராஜதர்பாரிலேயே பூஜாகாலங்கள் நடைபெறுவதும் சிந்திக்கற்பாலன.

ஆண்டவனின் அருள்நிலை :

இக்கோயிலுக்கு வருவோர் பலரும் மூலவராகிய திருமூலநாதரைத்தரிசிப்பதில்லை நடராஜரைத் தரிசித்துவிட்டு அப்படியே சென்றுவிடுகின்றனர். இது தவறு. பழமையில் திருமூலநாதரையே பதஞ்சலியும், வியாக்ரபாத முனிவரும் வழிபட்டனர். அவர்களின் வேண்டுகோட்படியே தாண்டவ தரிசனம் புரிந்தார் நடராசப்பெருமான். எனவே திருமூலநாதரையும் அவசியம் வழிபடவேண்டும். சிவகங்கையின் தென்பால் ஆலமரத்தின் அடியில் திருமூலநாதர் எழுந்தருளியிருந்தார். ஆனால் இப்பொழுது ஆலமரம் இல்லை. இத் தலவிருட்சமும் வைத்து வழிபடுதல் நலம்பயக்கும்.

ஆண்டவன் உயிர்களின் பக்குவநிலைக்கு ஏற்ப உருவநிலையிலும் அருவுருவ நிலையிலும் அருவ நிலையிலும் வந்து அருள்பாலிக்கின்றான் என்பர். இம்மூன்று நிலைகளையும் சிற்றம்பலத்திலேயே

கண்டுகளிக்கலாம். நடராசப்பெருமானுக உருவநிலையிலும், இலிங்க வடிவில் சந்திரமவுலீசராக அருவுருவ நிலையிலும், ஆகாயவடிவில் இரகசியமாக அருவநிலையிலும் இருந்து அருள்பாலிக்கும் நிலையே அம் மூன்று நிலைகளாம்.

ஐந்து சபைகள்

இங்கே ஐந்து சபைகள் உள்ளன. நடராசப்பெருமான் எழுந் தருளியிருக்கும் இடம் சித்சபை எனப்படும். சிற்றம்பலம் என்றும் கூறுவர். இதற்குமுன்னுல் நடராசப்பெருமான் திருமஞ்சனம்கொண் டருளுகின்ற இடம் கனகசபை எனப்படும். இதனைப் பொன்னம்பலம் என்பர். உற்சவமூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் இடம் தேவசபை எனப்படும். இதனைப் பேரம்பலம் என்பர். இங்குதான் தீட்சிதர்கள் கூடி நிர்வாகநிலை குறித்தும் மற்றும் நடைமுறைச் சட்டதிட்டங்கள் குறித்தும் கலந்து பேசி முடிவெடுப்பர். இவர்கள் கொண்டுள்ள நிர்வாக முறைகளை ஆட்சியிலுள்ளவர்கள்கூடப் புரிந்துகொள்ளுதல் பயனளிக்கும் எனலாம் நடராஜப்பெருமானின் திருமுன்னர் கொடி மரத்தின் தென்பாலுள்ள இடம் சித்திரசபை எனப்படும். இதனை எதிரம்பலம் எனக்குறிப்பிடுவர். இராஜசபை எனப்படுவது ஆயிரக் கால் மண்டபமாகும்.

நூல் அரங்கேற்றம் :

இதுபோன்ற மண்டபங்களில்தான் அக்காலத்தில் நூல்கள் அரங் கேற்றம் பெறுவது உண்டு. இக்காலத்தில் பதிப்பிக்கப்பெற்ற நூலை அரங்கேற்றம் செய்வதற்குக் காலமும் சூழலும் அமையாதநிலையில் வெளியீட்டு விழா என்று ஒன்று கொண்டாடிவிடுகின்றோம் இன்று, இங்கு, உலகம்சுற்றிய தமிழன் என்று பாராட்டப்பெறும் திரு. சோமலெ அவர்கள் ஆய்ந்து எழுதியுள்ள இந்நூலை வெளியிடுகின் ரோம். இத்திருக்கோயில் நிர்வாக நிலைகள் குறித்தும் வழிபாட்டு முறைகள் குறித்தும் தீட்சிதர்கள் பலர் பல கட்டுரைகள் எழுதி யுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இல்லை என்பார் தில்லையைப் பார்க்க :

கடவுள் இல்லை என்று கூறிவருவோர் உண்மையிலேயே கடவுள் இருக்கிருரா என்பதை அறிந்துகொள்ளும் வேட்கையில் இருப்பார் களேயானுல் இங்கு நடக்கும் வழிபாட்டு முறைகளைக் கூர்ந்து கவனித்து வந்தால் புரிந்து கொள்ளலாம். உலக முக்கியத்துவம் வாய்ந்த இத்தலம் நடராஜர் தலம் என்பதற்கு ஏற்ப ராஜ உபசாரத் தில் வழிபாடுகளும் மற்ற மற்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றுவருகின்றன. ஒரு குழி நிலம் தனக்குச் சொந்தமில்லாத இத்திருக்கோயிலைச்சார்ந்து 300 தீக்ஷிதர் குடும்பங்கள் வாழ்ந்துவருவதும், வழிபாடுகளும் சிறப்பு நிகழ்ச்சிகளும் எந்தத்தடையின்றி – குறைவுமின்றி இராஜதர்பாரில்

நடந்துவருவதும் கடவுள் உண்டு என்ற உண்மையைப் புலப் படுத்தும்.

இங்கு வெளியிடப்பெறும் இந்நூலைத் திரு. சோமலெ அவர்கள் இனிய தமிழில் பாமரரும் பண்டிதரும் புரிந்துகொள்ளும்வகையில் எழுதியுள்ளார். தெய்விக மணம் பரப்பும் இம்மலரின் முதல் தொகுதியே இப்பொழுது வெளியிடப்பெறுகிறது. மேலும் இரு தொகுதிகள் வெளியிட உள்ளன,

தேடிய பொருளில் தில்லைத் திருப்பணிசெய்க !

மலரை நன்முறையில் பெரும்பொருட் செலவில் வெளியிடும் அன்பர் திரு. கருமுத்து சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் உடலால் இளைஞராயினும் உணர்வால் மூதறிஞர். தமிழ்நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் நகரத்தாரின் திருப்பணியைப் பெற்றன ஆகும். ராஜா. சர். குடும்பமும், கருமுத்து செட்டியார் குடும்பமும் இப்பணியில் பங்குபெற்றுள்ளன. கருமுத்து செட்டியார் குடும்பம் நல்ல சைவப்பற்றும் இறைபணி உணர்வும் உடையது. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் தம் பிள்ளைகட்கு ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்று பெய ரிட்டதே இதற்குச் சான்று பகரும். அவரின் பேரர் இந்தச் சொக்கலிங்கம் செட்டியார்.

பொதுவாக இளைஞர்கட்கும் சிறப்பாக நகரத்தார் இளைஞர்கட்கும் எடுத்துக்காட்டாகத்திகழும் இவர் பாராட்டுக்கு உரியவர். ஈட்டிய பொருளை இறைவன் திருப்பணிக்கு ஈடுபடுத்துவது இப்பொழுது அருகிவருகிறது. சொக்கலிங்கம் செட்டியாரைப் பின்பற்றி மீண்டும் ஆண்டவனின் திருப்பணியில் அனைவரும் ஈடுபடுகின்றநிலை வரவேண்டும்.

இங்கு இந்நற்பணியில் ஈடுபட்டு நகரத்தார்மட்டுமின்றி ஏனைய பக்தர்களும் அறிஞர்களும் பொருளுதவிசெய்தும் தொண்டாற்றியும் வருவது அறிந்து மகிழ்கின்றேம். பொருள்கொடுத்தாலும் அதனைச் செம்மையாகத் திருப்பணிக்குப் பயன்படுத்தவேண்டும். அவ்வகை யில் தில்லைத் திருக்கோயில் திருப்பணியைச் செம்மையாக நடத்தி வரும் திருப்பணிக் கமிட்டியார் மிகமிகப் பாராட்டுக்குரியவர்கள். அதிலும் அன்பர் வாகீசம் பிள்ளையின் முயற்சி எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக இலங்குகிறது. இந்நூலை எழுதியோரும் வெளி யிட்டோரும் இவ்விழாவில் பங்குகொண்ட பக்தர்களும் நலம்பல பெற்று நீடுவாழச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச்சிந்திக்கின்றேம்.

வளர்க திருப்பணி ! **வாழ்க அடியவர் !**

குறைவு இலா நிறைவு

தருமையாதீனப் புலவர், பேராசிரியர்.

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

சான்றோர் பெருமிதம் :

இறைவனை அநுபவிக்கும் அநுபூதிமான்களாகிய சான்றோர்கள் அந்த இன்பத்திலேயே ஆழ்ந்து ஆழ்ந்து திளைப்பவர்கள். அந்த இன்பநிறைவிலேயே நிலைத்து நிற்பவர்கள். அதனால் உலகியல் துன்பங்கள் அவர்களை ஒன்றும் செய்வதில்லை. உலகியல் துன்பங்களைப் பற்றி அவர்கள் தினையளவும் கருதுவதில்லை. அந்த வகையில் அவர்களுடைய திருவாக்குக்களில் பெருமிதம் ஒளிவிடுவதைக் காணலாம். அவற்றை ஓதுவதால், அந்த உயர்நிலைக்கு நாமும் மெல்லமெல்ல உயர்ந்து செல்லும் வாய்ப்பைப் பெறுவது உறுதி.

திருநாவுக்கரசர் திருவுள்ளச் செம்மாப்பு :

திருவாரூர் சென்று வழிபடும் அப்பர் அடிகள் சீகாமரப் பண்ணிலே செந்தமிழ்ப்பதிகமொன்றினை அருளிச்செய்து இன்புறுகின்றார்.

திருவாரூரில் வீற்றிருக்கும் திருமூலட்டானன் திருவடிகளைக் கைகளால் தொழுதும், வாயினால் பதிகங்களை ஓதி வழிபட்டும், பேரின்பம் அடைந்து செம்மாந்திருக்கும் **தமக்கு ஒரு குறையும் இல்லை** என்று திருவுள்ளத்திலே பொங்கி வழியும் மகிழ்ச்சியும் நிறைவும் அற்புதமாகக் கவிதை வடிவெடுக்கின்றன.

“ பூங்கழல் தொழுதும் பரவியும் புண்ணியா புனிதா உன்பொற்கழல்
ஈங்கிருக்கப் பெற்றேன் **என்ன குறை உடையேன் ?**
ஓங்கு தெங்கிலை யார்கமுகிள வாழை மாவொடு மாதுளம்பல
தீங்கனி சிதறும் திருவாரூர் அம்மானே ”

(அப்பர் தேவாரம் — 301)

மயிலாடுதுறைத் திருவாக்கில் :

மயிலாடுதுறையில் இறைவனை வணங்கி மகிழ்ந்த அடிகளார், குறுந்தொகைப் பதிகம் ஒன்றில் இம்மனநிலையை மேலும் தெளிவு

படுத்துகின்றார். மயிலாடுதுறையில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் இறைவன், திருநீலகண்டம் உடையவன்; எட்டுத் தோள் களை உடையவன்; வேதங்களை ஓதும் இயல்பினன்; அவனது நெடும் புகழ்வாய்ந்த திருவடிகளை ஏத்தி, அவ்வின்பத்திலே ஒன்றியிருப்ப தால், இக்கொடிய மானிட வாழ்க்கையின் பாதிப்புக்கள் எனக்கு இல்லை என்று அழகுறப் புனைந்து பாடுகின்றார் அடிகளார் :

" குறைவிலோம் கொடு மானுட வாழ்க்கையால்,
கறைநிலாவிய கண்டன் எண் தோளினன்
மறைவலான் மயிலாடு துறையுறை
இறைவன் நீள்கழல் ஏத்தியிருக்கிலே "

(அப்பர் தேவாரம் — 1460)

மறுமாற்றத்தாண்டகத்தில் :

குறையற்ற வாழ்வு தமக்குக் கைகூடப்பெற்ற பேருண்மையை மறுமாற்றத் திருத்தாண்டகத்திலேயே நாவரசர் அருள்வார்; அங்கும் சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றமையே அம்மனநிலைக்கு அடிப்படை என்று வெளிப்படுத்துகின்றார் :

" என்றும்நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரும்இல்லை :
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோமல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோமல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப்போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோமே?

(அப்பர் தேவாரம் — 3051)

பெருமானது திருவடி இன்பத்தில் திளைத்திருப்பதால் -'ஆன்மலாபம்' அடைந்து நிற்பதால் வேறு குறை ஏதும் இல்லை என்று நிறைவுற்ற நெஞ்சு ஆதலின் அந்த நிறைவு திருவாரூர்ப்பாட்டின் முதல்இரண்டு அடிகளில் எவ்வளவு தெளிவாக வெளிப்பட்டு விட்டது! அதிலும், **"என்ன குறை உடையேன்?"** என்ற தொடர் அடிகளராது திரு வுள்ளச் செம்மாப்பினை எடுத்துக்காட்டுகின்றது அன்றோ? மறுமாற்றத் திருத்தாண்டகத்திலும், மயிலாடுதுறைத் திருப்பாட்டிலும் இந்த மன நிலை மேலும் உறுதியாகப் பொருந்தி நிற்றலைக் காணலாம்.

மணிவாசகர் மாண்பு :

திருவாசகத்தில், நீராடும் பெண்கள் கூற்றாக வரினும், மணிவாச கரது திருவுள்ளத்தின் நிறைவாகக் கொள்ளத்தக்க திருவெம்பாவை வரிகள் இங்கு நினைக்கத் தக்கன.

" இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோரெம்பாவாய் "

(திருவெம்பாவை - 9)

இனி என்னகுறை ?

இறைவன் பரிபூரணனுக - என்றும் எங்கும் நிறைந்தவனுக உள்ள கருணை முதல்வன்; அவனை அடைந்து அநுபவிக்கும் அருளாளர்களுக்கும் அத்தகு நிலை எய்துதல் இயல்பேயன்ரே! அதனுல் அவற்றை ஓதி மகிழ்வோர்க்கும் குறைவிலா நிறைவு உளதாகும் என்பது உறுதி ; மாணிக்கவாசகர்,

" குலாங்கள்தாம் இல்லா இன்பமே! உன்னைக்
குறுகினேற்கு இனி என்ன குறையே "

(திருவாசகம் - 389)

என்று தம் நிலையை முதற்கண் சுட்டி, அதனை மேலும் விளக்கியருள்வாராக, அடுத்துப் பாடும் திருப்பாட்டு மேலும் ஓதி உணரத்தக்கது.

" குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே!
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே!
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே!
சிறைபெரு நீர்போற் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
இறைனே! நீயென் உடலிடம் கொண்டாய்;
இனி உன்னைஎன் இரக்கேனே "

(திருவாசகம் - 390)

சுந்தரர் திருவாக்கில் ;

சுந்தரர் திருவாவடுதுறையில் பெருமானை உருகிப்பாடும் திருப் பதிகத்தில், உன்னையல்லால் எனக்கு 'ஆர் உறவு?' 'அஞ்சல் என்றருளாய்' என்று வேண்டுங்கால் எடுப்பிலேயே இறைவனது குறைவிலாத நிறைவு மாண்பினையே அருளித் தொடங்குகின்ருர்.

" குறைவிலா நிறைவே! குணக்குன்றே!
கூத்தனே! குழைக்காதுடையானே!
உறவிலேன் உனையன்றி மற்றடியேன்
ஒருபிழை பொறுத்தால் இழிவுண்டே? "

(சுந்தரர் - திருவாவடுதுறை 6)

இத்தகைய இறைவனைக் குறைவிலா நிறைவாக நம்சான்ருேர் சென்ற நெறியில் நாமும் வழிபட்டு, அந்நிலைபெற முந்துவோமாக.

மகாமகப் பெருவிழா

பேராசிரியர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.

முன்னோர் நம்பிக்கை :

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் மகாமகப் புனித நீராடல்விழா, வரும் மார்ச்சுத்திங்கள் முதல்நாள் சனிக்கிழமையன்று கும்பகோணத்தில் நடைபெற உள்ளது. வடநாட்டில் இவ்வாறே பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 'கும்பமேளா' என்ற புனித நீராடும் விழா ஒன்றும் சிறப்புற நடைபெற்றுவருகிறது.

மகாமகவிழா தமிழ்மக்களுக்குமட்டுமல்லாமல், இந்தியப்பெரு நாட்டில் வாழும் இந்து சமயத்தினர் அனைவருக்கும் ஒரு பெரும் புனித நீராடல் விழாவாக விளங்கிவருகிறது. கடல், ஆறு, குளங்கள் போன்றவற்றில், குறித்த சில நாட்களில் புனித நீராடுவது இந்து மதத்தின் மிகப்பழமையான மரபாக இருந்துவருகிறது. இத்தகு நீராடல்களை வெறும் புற அழுக்குப் போக்குவதாகமட்டும் கருதாது, இறைவனின் கருணையில் திளைத்தாடுவதாகக் கருதுவதே நமது முன்னோரின் நம்பிக்கையாகும்.

காசியிலும் வீசம் அதிகம் :

தென்னாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் பெரும் சிறப்புப்பெற்ற கோயில்கள் நிறைந்த பெருநகரம் கும்பகோணம். அருள்மிகு மங்களாம்பிகை உடனாகிய அருள்மிகு ஆதிகும்பேசுவரர் முதலாய மூர்த்திகள் கோயில்கொண்டுவிளங்கும் பல சிவன்கோயில் களும், பல விஷ்ணுகோயில்களும், மகாமகக்குளம், பொற்றாமரைக் குளம் போன்ற தீர்த்தங்களும் நிறைந்துள்ள இவ்வூர் காவிரியின் தென்கரையில் நிலவளமும், வணிகவளமும் மிக்கதாக விளங்கி வருகிறது. "காசியிலும் வீசம் அதிகம் கும்பகோணம்" எனப் போற்றப்பெறும் இந்நகரத்தில் அமைந்துள்ள புனித தீர்த்தமாகிய மகாமகத் திருக்குளத்தில்தான் இப்புனித நீராடல் விழா சிறப்பாக நடைபெறுகிறது.

நவகன்னியர் பெற்றபேறு :

எல்லாம்வல்ல சிவபரம்பொருளால் அம்பு எய்தி சிதைக்கப்பெற்ற குடத்திலிருந்து சிதறிய அமுதம் ஐந்துகுரோச பரப்பளவு சிதறியது.

அருள்மிகு கும்பேசுவரர் கோயில்கொண்டுள்ள இடத்திற்குத் தென் கிழக்கில் சிதறிய அமுதம் அங்கே ஓர் திருக்குளமாக அமைந்தது. இக்குளமே மகாமகத்திருக்குளம் எனவழங்கப்பெறுகிறது. அருள்மிகு ஆதிகும்பேசுவரரின் மாசிமகப்பெருவிழாவின் தீர்த்தவாரி உற்சவத் தன்றே இப்புனிதநீராட்டு அமைகிறது. கங்கை, யமுனை, நருமதை, சரஸ்வதி, கோதாவரி, காவிரி, பயோட்டினி, சரயு, கன்னியாகுமரி என்ற பெயர்பெற்ற நதிவடிவாய கன்னியர் ஒன்பதின்மரும் சிவ பெருமான் திருவருள்பெற்று இப்புனித குளத்தில் நீராடித் தங்கள் பாபங்களை நீக்கிக்கொண்டார்கள் என்பது புராண வரலாறு. இவ் ஒன்பது கன்னியரின் திருவுருவங்கள் இன்றும் இங்குள்ள அருள்மிகு காசிவிசுவேசர் திருக்கோயிலில் உள்ளன.

மகாமக புண்ணியகாலம் :

வியாழபகவான் சிம்மராசியில் பொருந்தும்போது, அவரோடு, மாசித்திங்களில் மகநட்சத்திரமும், பௌர்ணமியும் சேருகின்ற நிலை யில், கும்பராசியில் சூரியன் இவர்களையும் இவர்கள் சூரியனையும் முழுப்பார்வையுடன் பார்க்கும்நாளே மகாமக புண்ணியநாளாகும். குருபகவான் கும்பராசிக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையே வருவதால் மகாமக புண்ணியகாலமும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையேவருகிறது.

பதினாறு மண்டபங்கள் :

அமுததீர்த்தம் என்றும், அமுதவாவி என்றும் வழங்கப்பெறும் மகாமகக்குளத்தின் பெருமையைப் புராணங்கள் பலவாகப் பேசு கின்றன. சேக்கிழார் பெருமான்,

> 'பூமருவு கங்கைமுதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
> மாமகந்தான் ஆடுதற்கு வந்துவழி படுங்கோயில்'

எனச் சிறப்பித்துள்ளார். அழகிய படிக்கட்டுக்களோடு இக்குளத் தைச் சுற்றிலுமாகப் பதினாறு மண்டபங்களும் அமைந்துள்ளன. இம்மண்டபங்களுக்குள்ளே ஒவ்வோர் சிறுகோயிலும் உள்ளது. இங்கே பதினாறு சிவலிங்கங்கள் எழுந்தருளச் செய்யப்பெற்றுள்ளன. இத்தீர்த்தத்தின் வடமேற்குப் படிக்கட்டுக்களின் மேல் ஓர் அழகிய பதினாறுகால் மண்டபம் அமைந்துள்ளது. அருள்மிகு ஆதிகும்பே சுவரர் தீர்த்தங்கொடுப்பதற்கென இம்மண்டபம் அமைக்கப்பெற்றது.

நீராடிப்பெறும் பேறுகள் :

மகாமக புண்ணியநாளில் இக்குளத்தில் தீர்த்தமாடினால் பெறும் பேறுகளைப் பல நூல்கள் விளக்குகின்றன. இக்குளத்தை ஒருமுறை

நமஸ்கரித்தால் தேவர்கள் யாவரையும் நமஸ்கரித்த புண்ணியம் கிடைக்கும் இக்குளத்தை ஒருமுறை வலம்வந்தால் பூமியை நூறு முறை வலம்வந்த புண்ணியம்வாய்க்கும். மகாமகத்தன்று நீராடினுல் கங்காதீர்த்ததில் நூறு வருடகாலம் வசித்துப் பெறும் புண்ணியம் உண்டாகும். இக்குளத்திலுள்ள பிரமதீர்த்தத்தில் ஒருமுறை நீராடினுல், நீராடியவர்கள் கோத்திரம், மனைவியின் கோத்திரம், அம்மானின் கோத்திரம் போன்ற ஏழு கோத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் நற்கதிகிட்டும். இக்குளத்தின் கண் அமைந்துள்ள எட்டுத்தீர்த்தங்களிலும் நீராடுவார் பெறும் பேறுகளாகப் புராணங்கள் இவ்வாறு பல இம்மை மறுமைப் பயன்களைக் கூறிக்காட்டுகின்றன.

புராணங்கள் :

மகாமகக்குளத்தில் நீராடுவதற்கு முன் காவிரியில் நீராடுவது வழக்கம். மகாமக வருடத்தில் எல்லாத் தீர்த்தங்களும் கும்கோணத்திற்கு வந்துவிடுவதாகக்கூறுவர். பழங்காலத்தில் இதனுல் மகாமக ஆண்டில் மக்கள் தீர்த்தயாத்திரை மேற்கொள்ளாதிருந்தனர். இத்திருநாளில் நீராடி, இங்குள்ள மூர்த்திகளைத் தரிசித்து," இயன்றவாறு தான தருமங்கள் செய்வது பெரும் பயன்விளைக்கும். இத்தகு சிறப்பு மிக்க கும்பகோணத்தின் சிறப்பினையும், மகாமக நீராடலின் பெருமையினையும் கூறும் நூல்கள் சில உள்ளன. வடமொழியில் பவுடிகம், பிரமகாண்டம், காந்தம் முதலியன இந்நகரின் பெருமை பேசுவன. தமிழில் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களால் செய்யப் பெற்ற 'திருக்குடந்தைப் புராணம்' என்ற அரிய நூல் ஒன்றும் உள்ளது இத்தலத்தைப்பற்றிய பிரபந்தநூல்களும் பல உள்ளன.

செறிகொண்ட சிந்தைதனுள் தெளிந்து தேறித்
  தித்திக்குஞ் சிவபுவனத் தமுதம் போலும்
நெறிகொண்ட குழலியுமை பாக மாக
  நிறைந்தமரர் கணம்வணங்க நின்ருர் போலும்
மறிகொண்ட கரதலத்தெம் மைந்தர் போலும்
  மதிலிலங்கைக் கோன்மலங்க வரைக்கீ ழிட்டுக்
குறிகொண்ட இன்னிசைகேட் டுகந்தார் போலும்
  குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னுரே.

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

ஏன் தெரியுமா?

[பத்மா வெங்கட்ராமன்]

திருமணத்தன்று மணமக்களுக்கு அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுகிறார்களே ; அது ஏன் என்று தெரியுமா ?

அருந்ததி கற்பில்சிறந்த உத்தமி. ஒரு சமயம் அக்கினி தேவன் சப்தரிஷிகளின் மனைவியரைக் கண்டு மோகித்து விரகதாபத்தினால் துடித்தான். அப்போது அக்கினியின் மனைவியான ஸ்வாஹாதேவி அவனைத் திருப்திசெய்ய, தன் சக்தியால் சப்தரிஷிகளின் மனைவியரைப் போலத் தான் உருக்கொண்டு கணவனின் உள்ளத்தைத் திருப்திபடுத்திவைக்க நினைத்தாள்.

ஆறு ரிஷிகளின் பத்தினிகளைப்போலத்தான் அவளால் உருவம் கொள்ள முடிந்தது. ஆனால் அருந்ததியைப்போல் அவளால் உருவம் எடுக்க முடியவில்லை. அதனால் ஸ்வாஹா தேவி அருந்ததியைக்கண்டு வணங்கி, “அருந்ததி ! நீ மகா உத்தமி. எவனொருவன் தன் திருமண காலத்தில் அக்கினி, பந்துமித்திரர்கள் முன்னிலையில் உன்னைத் தரிசிக்கிறானோ, அவன் சுகத்தையும், தரத்தையும் பெற்று நீண்டகாலம் மனைவியுடன் வசிப்பான். அவன் மனைவியும் வைதவ்யம் இல்லாமல் சுமங்கலியாகவே தன் வாழ்நாளை முடித்துக்கொண்டு கணவனுடன் புண்ணிய லோகத்திலும் சேர்ந்திருப்பாள்” என்று அனுக்கிரகித்தாள்.

அதனால்தான் மணமக்களுக்குத் திருமணத்தன்று அருந்ததியைக் காட்டுகிறார்கள்.

நன்றி.

— தினமணி கதிர். 15—2—80.

தருமையாதீனத்தில் சைவசித்தாந்த அறிஞர்கள்

ஆலோசனைக்கூட்டம்

தருமையாதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்பு, ஆதீனச் சார்பில் சைவசித்தாந்த ஆராய்ச்சிக் கழகம் நிறுவிப் பதிவு செய்தல் பற்றிய அறிஞர்களின் ஆலோசனைக் கூட்டம் 26, 27—1—80 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. அறிஞர்களின் கருத்துக்களாகக் கீழ்க்காணும் பொருள்கள் குறிப்பிட்டு ஆராயப்பெற்றன.

1. சைவாகமங்களின் ஞானபாதப்பகுதிகளையும் பத்ததிகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் தனித் தனியே மொழிபெயர்த்து வெளியிடுதல்.

2. சிவஞானபோதம் முதலிய நூல்களின் மாபாடியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடுதல்.

3. பதினெண் புராணங்கள் மற்றும் தலபுராணங்கள் சிவதருமோத்தரம் இவைபற்றி, தக்கவர்களுக்குப் பயிற்சியும் ஆராய்ச்சியும் அளித்தல். அவற்றின் கருத்துக்களைச் சொற்பொழிவு வாயிலாகப் பரப்புதல்.

4. பள்ளியிறுதித் தேர்வு, புலவர், பி. லிட்., மற்றும் இதற்குச் சமமான தமிழறிவு பெற்றவர்கள், ஆர்வம் உள்ளவர்கள், மேல்நிலை ஆராய்ச்சிக் கல்வியாகச் சைவசித்தாந்தத்தைப் பயில்வதற்குக் தக்க ஆதரவளித்து வாய்ப்புகள் செய்துதருதல்.

5. சைவ சித்தாந்தக் கலைக்களஞ்சியம் தமிழில் வெளியிடுதல்.

6. தருமையாதீனத்தின் பண்டாரசாத்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் ஆராய்ச்சிசெய்தும் வெளியிடுதல்.

7. ஆதீனச் சார்பில் நடைபெற்றுவரும் தேவார, வேதாகம பாடசாலையின் மேல்நிலைக் கல்வியாக இசை, புராணங்கள், இலக்கியங்கள் இவைபற்றிய பயிற்சி அளித்தல்.

8. ஆண்டுக்கு மூன்று முறை சைவசித்தாந்தம் பற்றிய கருத்தரங்கமும், ஒருமுறை மாநாடும் நடத்துதல்.

9. தமிழிலக்கியங்களில் சைவசித்தாந்தம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் வெளியிடுதல்.

கலந்துகொண்ட அறிஞர்கள்.

1. மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.
2. புலவர். திரு. க. வெள்ளைவாரணனுர்.
3. திரு. ந. ரா. முருகவேள். எம். ஏ..
4. டாக்டர் திரு.ச. அகத்தியலிங்கம், எம். ஏ.. பி. எச்டி.
5. டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி, எம். ஏ., பி. எச்டி.,
6. திரு. மு. அருணசலம், எம். ஏ.,
7. திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம். ஏ.,
8. திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்
9. திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam


Sir Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

Very happy to have made the visit to the temple this evening and had the dharsan of the Lord I pray for his blessings to all of us.

(S-d) C. Raghavan

28—12—79 Asst Collector (T) of Thanjavur

மகாமக தீர்த்தத் திருக்குளம்



1968-ல் நடைபெற்ற மகாமகத்தன்று

பக்தர்கள் புனிதநீராடும் காட்சி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அரவிரி கோடல்நீடல் அணி காவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவல் மண மல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழ கன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி இருந் தானவன் எம்இறையே.

— சம்பந்தர்.

சொன்மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
சொற்பொருளும் கடந்தசுடர்ச் சோதி போலும்
கன்மலிந்த கயிலைமலை வாணர் போலும்
கடல்நஞ்சம் உண்டிருண்ட கண்டர் போலும்
மன்மலிந்த மணிவரைத்திண் தோளர் போலும்
மலையரையன் மடப்பாவை மணாளர் போலும்
கொன்மலிந்த மூவிலைவேல் குழகர் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே.

— அப்பர்.

பூவார்பொய்கை அலர்தாமரைசெங் கழுநீர்புறவெல்லாம்
தேவார்சிந்தை அந்தணாளர் சீராலடிபோற்றக்
கூவார்குயில்கள் ஆலும்மயில்கள் இன்சொற்கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந் தழகார்குடந்தைக் காரோணத்தாரே.

— சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்.

திருவேட்டக்குடி, திருத்தெளிச்சேரி தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

இவ்விருதலங்களும் புதுவை மாநிலத்தில் காரைக்கால் பகுதியில் விளங்குவன. தெளிச்சேரி அருச்சுனன் பாசுபதம்வேண்டித் தவஞ் செய்த தலம். திருவேட்டக்குடி இறைவன் வேட்டுவக்கோலத்தோடு வந்து பன்றிவேட்டையாடி அருச்சுனனுடன் போரிட்டு அவனுக்குப் பாசுபதம் வழங்கி அருள்செய்த திருத்தலம். இவை தேவாரப்பாடல் பெற்ற சிவதலவரிசையில் சோழவளநாட்டைச்சேர்ந்தகாவிரித் தென் கரைத் தலங்களில் 49, 50 ஆவது தலங்களாகத் திகழ்வன.

திருவேட்டக்குடி

இத்தலம் காரைக்காலுக்கு வடமேற்கே 9½ கிலோமீட்டர் தூரத் தில் உள்ளது. காரைக்கால் — பொறையாறு பேருந்துச்சாலையில் வரிச்சிகுடி பேருந்துநிலயத்திலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தூரம் சென்ருல் கோயிலை அடையலாம். இவ்வழியில் செல்லும் பேருந்துகள் மிக அதிகம். காரைக்காலிலிருந்தும் பொறையாற்றி லிருந்தும் இத்தலத்தை அடையும் நகரப்பேருந்தும் உள்ளது.

தலப்பெருமை : இத்தலம் திருஞானசம்பந்தர் அருளிய சிறந்த திருப்பதிகம் ஒன்றைப் பெற்றுள்ளது. அம்பிகை தவம் செய்து இறைவனைப் பூசித்த பெருமைக்குரியது. தேவர்கள் வழிபட்டு அரக்கர் களால் தங்கட்கு ஏற்பட்ட அச்சம்நீங்கியசிறப்புடையது. அருச்சுனன் பாசுபதக்கணை பெற்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றுள்ளது.

கோயிலமைப்பு : இத்தலம் சின்னஞ்சிறிய அழகிய கிராமம். திருக்கோயில் ஊரின் கிழக்குப்பகுதியில் உள்ளது. கிழக்குநோக்கிய சந்நிதி. நாட்டுக்கோட்டை நகரத்தாரின் திருப்பணியைப்பெற்று விளங்குகிறது கோயிலுக்கு எதிரே தீர்த்தமும் பின்னல் தலமரமாகிய புன்னையும் உள்ளன.

ஐந்து நிலைகளை உடைய அழகிய இராஜகோபுரத்தைக்கடந்து உள்ளே சென்ருல் விநாயகர் கொடிமரம் நந்தி பலிபீடங்களை முதலில்

வழிபடலாம். கோயிலுக்கு உள்ளே சென்றால் முதலில் மகாமண்டபம் காட்சிதருகிறது. அம்பாள்கோயில் இம்மண்டபத்தில் உள்ளது. இரண்டாவதுவாயிலை அடுத்து ஸ்நபன மண்டபம் உள்ளது. உற்சவ மூர்த்திகள் ஸ்நபன மண்டபத்தில் எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளனர்.

சுவாமிசந்நிதியில் துவாரபாலகர் காவல்புரிகின்றனர். மூன்றாவது நிலைவாயிலை அடுத்து அர்த்தமண்டபம் உள்ளது. அடுத்துக் கருப்பக் கிருகம். அருள்மிகு திருமேனியழகர் நம்மை ஈர்த்து ஆட்கொள்ளும் நிலையில் சிவலிங்கத்திருவுருவில் திகழ்கின்றார். பெயருக்கு ஏற்றபடி அழகிய அருட்டிருமேனியோடு இறைவர் விளங்குகிறார். திருஞான சம்பந்தர் அருளிய,

" வண்டிரைக்கும் மலர்க்கொன்றை விரிசடைமேல் வரியரவம்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக் காபாலி கனைகழல்கள்
தொண்டிரைத்துத் தொழுதுஇறைஞ்சத் துளங்கொளிநீர்ச்
[சுடர்ப்பவளம்
தெண்டிரைக்கள் கொணர்ந்தெறியும் திருவேட்டக் குடியாரே "

என்ற திருப்பதிகத்தை ஓதி வழிபடலாம்.

திருவுலாக்கொள்ளும் பஞ்சமூர்த்திகளும், நடராஜர், சிவகாம சுந்தரி, அருச்சுனன், வேடராக எழுந்தருளிய இறைவர், வேட்டுவிச்சி யாக எழுந்தருளிய அம்பிகை திருவுருவங்களும் தரிசிக்கத்தக்கவை.

மகாமண்டபத்தில் அம்பிகை அருள்மிகு சாந்தநாயகி தெற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். அருள்வழங்கும் குறிப்புடைய கண்க ளோடும் அமைதியான முகத்தோற்றத்தோடும் அம்பிகை காட்சி தருகிறார். மேற்குப் பிராகாரத்தில் முதலில் விநாயகரும், அடுத்து முருகனும் எழுந்தருளியுள்ளகோயில்கள் உள்ளன. முருகன்சந்நிதியில் ஞானசம்பந்தரும் சனிபகவானும் உள்ளனர். அடுத்து புன்னைவன நாதர் கோயிலும் மகாலக்ஷ்மி கோயிலும் உள்ளன.

வடக்குப்பிராகாரத்தில் ஐயனார் சண்டேசர்கோயில்கள் உள்ளன. அடுத்து, பஞ்சமூர்த்திகள் எழுந்தருளும் மண்டபம் உள்ளது.

கீழ்ப்புறம் சமயாசாரியர் சூரியன் சந்திரன் பைரவர் முதலியோர் விளங்கும் மண்டபம் உள்ளது.

கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தியும், மேற்கே இலிங்கோற்பவரும், வடக்கே பிர்மா துர்க்கை ஆகியோரும் உள்ளனர்.

மூர்த்திகள்: இறைவன் திருப்பெயர் அருள்மிகு திருமேனியழகர்; வடமொழியில் சுந்தரேசுவரர் எனக்கூறுவர். இறைவிதிருப்பெயர் அருள்மிகு சாந்தநாயகி. சௌந்தரநாயகி எனவும் வழங்கப்படுகிறார். தலமரம் — புன்னை. தீர்த்தம் — எதிரே உள்ள தேவதீர்த்தமும், சந்திரபுஷ்கரிணியும், கடலும்.

புராண வரலாறுகள்

அம்மை தவம்செய்தது: உமையம்மை திருக்கயிலாயத்தில் சிறிதுநேரம் சுவாசமூச்சை அடக்குமாறு இறைவனை வேண்டினாள். இறைவன் சிறிதுநேரம்செய்து மூச்சைவிடுத்தார். அந்தக்கணநேரம் உலகிற்குப் பல ஊழியாயிற்று. இறைவன் மூச்சை அடக்கியநேரத்தில் உயிர்களும் உயிர்ப்படங்கிச் செயற்படாது ஒழிந்தன. இக்குற்றத்திற்காக அம்மையை இறைவன் திருவேட்டக்குடி சென்று வலைஞர் குலத்திற் பிறக்குமாறு கூறினார். உமையம்மை வருந்திப் பணிந்த போது இறைவன் அவ்வாறு பிறந்து வளர்ந்து நம்மை நோக்கித் தவம் புரிக; அங்குவந்து நாம் உன்னைத் திருமணம்புரிவோம் என்றருளினார். அம்பிகை திருவேட்டக்குடியில் புன்னையின் நிழலில் குழந்தையாகத் தோன்றினாள். வலைஞர் எடுத்து வளர்த்தனர். உரிய பருவத்தில் புன்னைமரநிழலில் அம்மை இறைவனைநோக்கித் தவம்செய்தாள்.

சோமுகன் என்ற அசுரன் நான்கு வேதங்களையும் கவர்ந்து கொண்டு கடலில் ஒளிந்திருந்தான். திருமால் மீன்வடிவாகச்சென்று அவனைக்கொன்று வேதங்களை மீட்டார். அரக்கனைக்கொன்ற கொலை வெறியால் கடலைக் கலக்கி வலைஞர்களுக்கு இடையூறுவிளைத்தார். நான்முகன் வேண்டுகோளுக்கிரங்கி இறைவன் வலைஞர்குலத்தில் தோன்றிக் கடலிடையேசென்று அம்மீனை வலைவீசிப்பிடித்துத் திருமாலின் கொலைவெறியைப்போக்கி அருள்செய்தார். வலைஞர்கள் தங்கட்கு இடர்விளைத்த மீனைப்பிடித்த பெருமானை அணுகித் தங்கள் நன்றியைத் தெரிவிக்கும்வகையில் தங்கள் மரபில் தோன்றியருளிய அம்மையை அவருக்கு மணம் முடித்தனர். அம்பிகையின் வேண்டு கோட்படி இத்தலத்திற்குப் புன்னைவனம் எனவும், தமக்குப் புன்னை வனநாதர் எனவும் பெயர்வழங்குமாறு அருள்செய்தார். இவ்வரலாறு திருவிளையாடலில் காணப்படும் வலை வீசிய படலக்கதையையொத்துள்ளது.

தேவர்களுக்கு வரம் அருளியது: தேவர்கள் அந்தகாசுரனால் தங்கட்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்தருளவேண்டுமென்று இத்தலத்தை அடைந்து அருள்மிகு திருமேனியழகரையும், அருள்மிகு சாந்தநாயகியையும் பிரார்த்தித்தனர். பெருமான் வயிரவரை ஏவி அந்தகாசுரனைக் கொல்லும்படிச்செய்து தேவர்களுக்கு மறுவாழ்வு

அருளினுர். தேவர்கள் உண்டாக்கிய தீர்த்தம் தேவதீர்த்தம் என வழங்கப்படுகிறது. தலம் தேவகோடிபுரம் என்ற பெயரைப்பெற்றது.

அருச்சுனன் பாசுபதம் பெற்றது : அருச்சுனன் பாரதப்போரில் கர்ணனை அழித்தற்பொருட்டு இறைவனிடம் பாசுபதாஸ்திரம் பெற விரும்பி இத்தலத்தில் தவம்புரிந்தான். இதற்கிடையே துரியோதனன் அருச்சுனனைக்கொல்ல மூகாசுரனை ஏவினுன். மூகாசுரன் பன்றியுருவ மெடுத்துவந்தனன். திருமேனியழகரும் உமையம்மையும் வேடனும், வேட்டுவிச்சியுமாகி அருச்சுனனைக் காக்க வந்தனர். நந்திதேவர் மானுகவும் நான்மறைகள் நாய்களாகவும் உடன்வந்தன. முருகன் வேட்டுவக் குமாரனுக வந்தார். அருச்சுனன் தவங்கலைந்து தன்னைக் கொல்லவந்த பன்றியைத் துரத்திச்சென்ருன். வேடர் உருவில்வந்த பெருமானும் அருச்சுனனும் ஒரே நேரத்தில் பன்றியின்மீது கணை யெய்தனர். பன்றி இறந்தது. யார் பன்றியைக்கொன்றவர் என்பதில் பெருமானுக்கும் அருச்சுனனுக்கும் வாதம் தோன்றிச் சண்டையாய் மூண்டது.

பெருமான் அருச்சுனனது பேராற்றலை அளந்தறிய விற்போர் மற்போர் புரிந்தார். அம்பிகை அருச்சுனனது மேனியில் அமைந்திருந்த மச்ச ரேகையைக்கண்டு மகிழ்ந்தாள். அருச்சுனன் இறைவனை வில்லால் அடித்தான். அவ்வடி மதுரையில் பாண்டியன் அடித்த பிரம்படியைப்போல அனைவரையும் திடுக்கிடச்செய்தது. அருச்சுனன் இறைவனது வில்லாற்றலையும் வேடனுய்வந்தவர் சிவபெருமானே என்பதையும் உணர்ந்து அடிபணிந்து வணங்கிப் பிழைபொறுக்க வேண்டினுன். இறைவன் திருவுளம் மகிழ்ந்து அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரக் கணை வழங்கினுர். தாம் வேடர் உருவந்தாங்கிவந்து பன்றி வேட்டையாடிய இத்தலம் வேட்டக்குடி ஆகுமாறும், அருச்சுனன் இதே வேடர்கோலத்தில் திருக்காளத்தி மலையில் கண்ணப்பராகத்தோன்றித் தம்மை அடையுமாறும் அருள் புரிந்தார்.

திருத்தெளிச்சேரித் தேவாரத்தில் அருச்சுனனோடு போர்புரிய வேடர் உருவம் தாங்கிவந்த குறிப்பு காணப்படுவதாலும், இத்தலம் (வேட்டைக்குடி அல்லது வேட்டுவர்குடி என்றபெயர் மருவி) திருவேட்டக்குடி என வழங்கப்பெறுவதாலும் இருதலங்களுக்கும் பொருந்துவதாக இவ்வரலாறு அமைந்துள்ளமையால் அருச்சுனன் தவம் செய்த தலம் திருத்தெளிச்சேரி எனவும், இறைவனும் அருச்சுனனும் பன்றிவேட்டையாடிய தலம் திருவேட்டக்குடி எனவும் கொள்ளலாம்.

இத்தலத்தில் மாசி மகத்தன்று இறைவன் அருச்சுனனுக்கு அருள்புரிந்த ஐதிக விழா சிறப்பாக நடைபெறுகிறது.

வழிபட்டோர் : அனவரதன் என்ற மன்னனும் அவன் மரபினரும் இக்கோயிலின் பெருமையை அறிந்து திருப்பணிகள் செய்வித்தும் திருவிழாக்கள் நடத்தியும் இறைவன் திருவருள் பெற்றுள்ளனர்.

விசுவாமித்திரரின் ஏவலால் கன்மாடபாதன் என்னும் அசுரன் வசிட்டரின் புதல்வர்களைக் கொன்றான். வசிட்டர் புத்திரசோகத்தினால் வருந்தி இத்தலத்தை அடைந்து தேவதீர்த்தத்தில் நீராடி இறைவன் திருவருளால் மீண்டும் மக்கட்பேற்றைப் பெற்றார்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் இத்தலத்தை அடைந்தபோது காஞ்சிபுரக் காட்சியை அவருக்கு இறைவன் இத்தலத்திற்கருகில் உள்ள பூவம் என்னும் ஊரில் காட்டினார்.

திருவிழாக்கள் : நான்குகால வழிபாடுகள் நிகழ்கின்றன. மாசி மகத்தன்று இறைவன் அருச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கிய ஐதிக விழா நிகழ்கிறது.

ஜோதி தரிசனம்: திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப் பதிகத்தில் இரண்டாம் திருப்பாடலில் 'தீயெரிகை மகிழ்ந்தாரும் திருவேட்டக்குடியாரே' என்று அருளிச்செய்தபடி இரவு நேரத்தில் இறைவனுக்கு அர்த்த யாமபூசை நிகழும் வேளையில் எதிரே உள்ள கடல்நடுவே ஒளிப்பிழம்பு ஒன்று தோன்றுவதாகக் கூறுகின்றனர்.

திருத்தெளிச்சேரி

இத்தலம் பேரளம் காரைக்கால் புகைவண்டித் தொடரில் காரைக்கால் புகைவண்டி நிலயத்திலிருந்து வடமேற்கே ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. காரைக்கோயில்பத்து என வழங்கப்படுகிறது. காரைக்கால் தமிழ்நாட்டின் பெருநகரங்களில் ஒன்றாக இருத்தலால் பல பகுதிகளிலிருந்தும் இவ்வூருக்கு வரப் பேருந்து வசதிகள் உள்ளன. இக்கோயில், காரைக்காலின்வடபால் இவ்வூரிலிருந்து பொறையாறு செல்லும் பேருந்துச்சாலையில் காரைக்கோயிற்பத்து என்னும் பேருந்துத்தடத்திற்கு மேற்புறம் உள்ளது.

இத்தலம் சோழவளநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 50 ஆவது தலம். திருஞானசம்பந்தர் பாடியருளிய அரியதொரு திருப்பதிகத்தைப்பெற்றுத் திகழ்வது. இதுவடமொழியில் சமீவனம் என்ற பெயரை உடையது.

தலப்பெருமை : இத்தலம் கிரேதாயுகத்தில் பிரமவனம் எனவும், திரேதாயுகத்தில் சமீவனம் எனவும், துவாபரயுகத்தில் ஆனந்தவனம்

எனவும், கலியுகத்தில் முத்திவனம் எனவும் வழங்கப்பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. முத்தித்தலம், சிவத்தலம், சூரியத்தலம், குகத்தலம், கௌரிதலம் என்ற பெயர்களை உடையது. சம்பந்த சரணாலயர் திருஞானசம்பந்தர் தேவாரத்தை ஓதிப் புத்தநந்திதலையில் இடிவிழச்செய்த அற்புதத்தைப்பெற்றது. உமையம்மை இறைவனை மணம்புரிந்துகொள்ளவேண்டித் தவம்செய்த பெருமையையும் உடையது. பிரமதேவன் இத்தலத்து இறைவனைப் பூசித்துப் படைப்புத் தொழிலைப் பெற்றான். அதனால் இவ்வூர் பிரமவனம் எனப்பட்டது. இறைவன் பிரமலிங்கம் எனப்பட்டார். அம்பரீஷமன்னனால் பூசிக்கப் பெற்றமையால் இறைவர் இராஜலிங்கம் எனப்பெற்றார். பல்குனன் வழிபட்டதால் பல்குனலிங்கம் எனவும், சூரியன் வழிபட்டதால் பாஸ்கரலிங்கம் எனவும் பெயர்பெற்றார். இத்தலத்துப் பெருமானைத் திங்கட்கிழமைகளில் வழிபடுவோர் எல்லாநலங்களும் எய்தி இன் புறுவர். அபிடேக ஆராதனைகள் செய்வித்துத் தரிசித்தோர் இம்மை மறுமை வீடு அனைத்தையும் பெறுவர். மகாசிவராத்திரியில் வழிபடு வோர்க்கு விளையும் புண்ணியப்பேற்றுக்கு அளவில்லை.

கோயிலமைப்பு: காரைக்கால் நகரத்தின் வடபால் காரைக் கோயில்பத்து என வழங்கும் இடத்தில் கோயில் உள்ளது. மேற்குப் பார்த்த சந்நிதி. நாட்டுக்கோட்டை நகரத்தாரின் சீரிய திருப்பணி யைப்பெற்று அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கற்றளியாகக் காட்சியளிக்கிறது. கோயில் தூய்மையோடு பேணிக் காக்கப்படுகிறது.

திருக்கோயிலுக்கு எதிரே சூரியபுஷ்கரிணி தீர்த்தம் உள்ளது. கரையில் அருள்மிகு சம்பந்தவிநாயகர் காட்சிதருகின்றார். அவரை வழிபட்டு ஆலயம் செல்லலாம். ஐந்துநிலைகளுடன் கூடிய அழகிய சிறிய இராசகோபுரம் கோயிலுக்கு அழகுசெய்கிறது. கோபுரத்தை யடுத்து முதற்பிராகாரம் உள்ளது. வடபுறம் திருவிழாக்காலத்தில் பஞ்சமூர்த்திகள் திருக்காட்சி வழங்கும் மண்டபம் உள்ளது ஈசான திசையில் யாகசாலையும், அக்னிமூலையில் திருமடைப்பள்ளியும் உள் ளன. பின் வலமாகவந்து முன்மண்டபத்தை அடைகின்றோம். அழகிய கருங்கற்பணியாலாகிய இம்மண்டபத்தில் விநாயகர், கொடி மரம், நந்தி, பலிபீடங்கள் உள்ளன.

இரண்டாம் வாயிலைக்கடந்து உள்ளேசென்றால் மகாமண்டபம் காட்சிதருகிறது. வலப்புறம் சோமாஸ்கந்தர் (உற்சவர்), விநாயகர் காட்சிதருகிறார். இடப்புறம் முருகன் திருமகள் விளங்குகின்றனர். அடுத்து வடபால் ஆடிப்பூர அம்பாள் எழுந்தருளியுள்ளார்.

மகாமண்டபத்தில் அம்பாள் கோயில் தெற்குநோக்கி உள்ளது. அம்பிகை கோயிலை வலமாகவந்து இடப்புறம் நடராசர் சந்நிதியைத்

தரிசிக்கலாம். அடுத்துத் திருவுலாக்கொள்ளும் உற்சவமூர்த்திகள் உள்ளனர். பஞ்சமூர்த்திகள் சந்திரசேகரர் சமயாசாரியர் ஆகியோர் விளங்குகின்றனர். அடுத்து நவக்கிரகங்கள் உள்ளனர். கீழ்புறம் பைரவர் சூரியன் சனிபகவான் தல ஐதிகக்கடவுளர் பிடாரி முதலிய மூர்த்திகள் விளங்குகின்றனர். அதையடுத்துக் கிராதமூர்த்தியும் மகாலிங்கமும் தென்பால் அறுபத்துமூவரும் உள்ளனர். கர்ப்பகிருகக் கோஷ்டங்களில் வடபால் துர்க்கையும் பிரமனும், மேல்பால் இலிங்கோற்பவரும், தென்பால் தக்ஷிணாமூர்த்தியும் விளங்குகின்றனர். சண்டேசர் தனிக்கோயிலில் வடகிழக்கில் விளங்குகிறார்.

சுவாமிசந்நிதி உயர்ந்து உள்ளது. வாயிலில் துவாரபாலகர் உள்ளனர். வாயிலின் இருபுறச்சுவர்களிலும் அம்பிகை வழிபட்ட தல ஐதிகச் சிற்பமும் அர்ச்சுனன் தவத்தை விளக்கும் ஐதிகச் சிற்பமும் உள்ளன. சுவாமி வெள்ளி விமானத்தில் விளங்குகின்றார். இத்தலத் திருப்பதிகப்பாடலாகிய,

> பூவலர்ந்தன கொண்டுமுப் போதும் பொற்கழல்
> தேவர்வந்து வணங்கும் மிகு தெளிச் சேரியீர்
> மேவருந்தொழி லாளொடு பன்றிப்பின் வேடனும்
> பாவகங்கொடு நின்றது போலும்நும் பான்மையே.

என்ற பாடலை ஓதி வழிபடலாம். அம்பிகை சந்நிதியில் நாம் நம்மை மறப்போம். சுயம்வரதபஸ்வினி என்ற பெயருக்கு ஏற்பத் திருமணம் வேண்டி வழிபடும் நிலையில் விளங்குகின்றார்.

மூர்த்திகள் : இறைவன் திருப்பெயர் அருள்மிகு பார்வதீசுவரர். இறைவி பெயர் அருள்மிகு சக்தியம்மை. அம்பிகை சுயம்வரதபஸ்வினி என வழங்கப்பெறுகிறார்.

தலமரம் — வில்வம். தீர்த்தம் — சூரியபுஷ்கரிணி, மற்றும் குகதீர்த்தம் ; தவதீர்த்தம் ஆகியனவும் உள்ளன.

சூரியபுஷ்கரிணியில் ஞாயிற்றுக்கிழமைகளில் நீராடுவோர் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர். பௌர்ணிமையில் நீராடுவோர் பலபேறுகளையும் பெறுவர். இத்திருக்கோயிலுக்கு எதிரே அருள்மிகு கோதண்டராமர்கோயில் அழகுற அமைந்துள்ளது. கோதண்டராமர் பேரழகுவாய்ந்த திருமேனியராய்த்திகழ்கிறார்.

புராண வரலாறுகள்

புத்தரை வாதில் வென்றது : திருஞானசம்பந்தர் திருநள்ளாற்று இறைவரை வணங்கித் திருத்தெளிச்சேரிக்கு எழுந்தருளினார்கள்.

திருஞானசம்பந்தர் தெளிச்சேரிக்கு வரும்வழியில், புத்தர்கள் வாழும் போதிமங்கை அருகேவரும் சிவனடியார்கள் 'பரசமய கோளரி வந்தான்' என்று சின்னம் காளம் முதலியவற்றை முழங்கி ஆரவாரித்தார்கள். அதனைக் கேட்கப்பொருத புத்தர்கள் தம்சமயக் கல்வியில் மேம்பட்டவராகிய புத்தநந்தியிடம் முறையிட்டார்கள். அதனைக் கேட்டு உளம் கனன்ற புத்தநந்தி தேரர்கூட்டத்துடன்வந்து நீங்கள் எங்களை வாதில் வென்றபிறகல்லவா வெற்றிக்கு அடையாளமாகிய சின்னம் முதலியவற்றைப் பிடித்தல்வேண்டும் என்று தடுத்தான். திருஞானசம்பந்தர் புத்தர் நம்மைவாதிற் பொருமிடத்து அறிவோம் என்று அமைதியாகக் கூறினர். அப்போது திருஞானசம்பந்தரது தேவாரத் திருப்பாடல்களை ஏட்டில்எழுதும் அடியார் ஒருவர்,

புத்தர் சமண் கழுக்கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணிவார் வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செழுத்துமே.

என்ற திருப்பாடலை ஓதி 'புத்தன் தலையில் இடிவிழுக' என வெகுண்டுரைத்தார். அன்பர்கூறிய மந்திரமாகிய அத்திரவாக்கினல் புத்தன் தலையில் இடிவிழ, அவன் தலை அறுபட்டுக் கீழே விழுந்தது. அதைக்கண்டு அஞ்சிய புத்தர்கள் சிதறி ஓடினர். அஃதுணர்ந்த ஞானசம்பந்தர் அடியார்களை நோக்கி அரன்நாமமே ஓதுமின்என்ருர். அரகர முழக்கம் கேட்ட புத்தர்கள் மீண்டும் சாரிபுத்தன் என்பவனோடு தர்க்க வாதம்புரிய வருமாறு பிள்ளையாரை அழைத்தனர். பிள்ளையார் அதற்கிசைந்தார். ஒரு மண்டபத்தில் புத்தரும் ஞானசம்பந்தரும் அடியார்களும் கூடினர். புத்தநந்தி தலையில் இடிவிழுமாறு செய்த அன்பரைக்கொண்டு தர்க்க வாதம் புரியச் செய்தார் ஞானசம்பந்தர். வாதத்தில் சாரிபுத்தன் தோல்வியுற்ருன் இறுதியில் புத்தர்கள் அனைவரும் சைவ சமயத்தின் பெருமையை அறிந்து சைவரானர்கள். போதிமங்கை திருநள்ளாற்றுக்கும் திருத்தெளிச்சேரிக்கும் இடையில் உள்ளது. இவ்வரலாற்றைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் விவரித்துக் கூறியுள்ளார்.

அம்பரீடன் மகப்பேறுபெற்றது: சூரியகுலத்தில் அம்பரீடன்என்ற மன்னன் மகப்பேறின்றித் தன்குலகுருவாகிய வசிட்டரிடம் தன் மனக்குறையை வெளியிட்டான். முனிவர் சிறந்த அந்தணகுமாரன் ஒருவனுக்கு இத்தலத்தில் ஹோமம்செய்தால் புத்திரப்பேறு கிடைக்கும் என்ருர். உத்தம இலக்கணம் பொருந்திய அந்தணச்சிறுவனை மன்னன் தேடினன். கோமதி ஆற்றின்கரையில் ரிசீக முனிவரின் மகனைப் பெற்றுக்கொள்ளுமாறு ஒரு அசரீரிவாக்கு கூறிற்று. மன்னன் மன மகிழ்ந்து முனிவரைவேண்டி அவர்புதல்வனை தனட்சேபனைப்

பெற்று வந்து யூபத்தில் அவனைக்கட்டி முறைப்படி யாகபூசை செய்தான். திருமால் முதலிய தேவர்கள் அனைவரும் மகிழ்ந்து மன்னனுக்கு மகப்பேறு வாய்க்குமாறு அருள்புரிந்தனர். அரசனுக்கு ஒரு ஆண் மகவு தோன்றிற்று. மன்னன் மனம் மிக மகிழ்ந்து இத்தலத் திருக்கோயிலை நன்கு திருப்பணிகள் புரிந்து திருவிழாக்கள் நடத்தித் தன் நாடு சென்ருன்.

சூரியபூசை ; சூரியன் தன் மனைவியர் இருவருள் ஒருவரிடம் மட்டும் மிக்கஅன்பு செலுத்திவந்ததால் அப்பெண்ணின் தந்தையான துவட்டா சினந்து சூரியனை ஒளியிழக்கச் சபித்தான். சூரியன் தன் பழி தீரற்பொருட்டு இத்தலத்திற்குவந்து வழிபட்டு அருள் பெற்ருன். சூரியனது வேண்டுகோட்படி பெருமான் தன்பெயர் பாஸ்கரேசன் எனவும், தீர்த்தம் சூரிய தீர்த்தம் எனவும் வழங்கிவரச் செய்தருளினுர். ஒவ்வோர்ஆண்டும் பங்குனித்திங்களில் 13 ஆம் நாள் தொடங்கிப் பத்து நாட்கள் இத்தலத்தில் சூரியபூசை நிகழ்ந்து வருகிறது.

ஞானசம்பந்தர் செய்த அற்புதம் ; திருஞானசம்பந்தர் இத்தலத்திற்குவந்தபோது சமணபுத்தரோடு தர்க்கவாதம் புரிந்தார். வீரசோழன் என்ற மன்னன் ஒருவன் சைவமே உண்மைச்சமயம் என்பதை நிலைநிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். ஞானசம்பந்தர் பழுக்கக் காய்ச்சிய இரும்பிலே ஏறியிருந்து சைவ சமயமே சமயம் என்பதை நிலைநாட்டினுர். சோழமன்னன் சைவப்பெருமையை உணர்ந்து சமணர்களைக் கழுவேற்றி உலகம் முழுவதும் சைவ சமயம் பரவிடச்செய்தான். இவ்வரலாறு பெரியபுராண வரலாற்றுள் இல்லை.

அருச்சுனனுக்குக் காட்சி ; அருச்சுனன் வனவாசத்தின்போது இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டுத் தவம்செய்தான். அதனை அறிந்த சிவபெருமான் அவனுக்கு அருள்செய்யும் குறிப்போடு நான்கு வேதங்களையும் நாய்களாகக்கொண்டு தான் ஒரு வேடனுகவும், அம்மை வேட்டுவிச்சியாகவும், முருகன் வேட்டுவக்குமரனுகவும் உடன்வர இரண்டு மான்குட்டிகளைக் கையில் பிடித்துக்கொண்டு அவன் எதிர் தோன்றினுர். அவ்வேளையில் துரியோதனன் சூழ்ச்சியால் மூகாசுரன் பன்றி உருவெடுத்து அருச்சுனனைக் கொல்லவந்தான். வேடராய்வந்த சிவபெருமான் பன்றியைத் துரத்திச்சென்று அதனைநோக்கி அம்பெய்தார். அருச்சுனனும் தவம்கலைந்து அப்பன்றியின்மீது அம்பெய்தான். இருவர் எய்த அம்புகளும் பன்றியின்மீது ஒரேநேரத்தில் பாய்ந்தது. பன்றி இறந்தது. இருவரில் யார் பன்றியைக் கொன்றவர் என்ற கேள்வி எழுந்தது. நானே கொன்றேன் எனக்கே அது உரியது எனச் சிவனும், நானே கொன்றேன் எனக்கே அது என்று இருவரும் வாதிடத் தொடங்கினர்.

வாதம் போராக உருவாயிற்று. இருவரும் மற்போர் புரிந்தனர். முடிவில் இறைவன் தன் உண்மைக் காட்சியை அருச்சுனனுக்குக் காட்டினர். அருச்சுனன் சிவபெருமானிடம் பாரதப் போரில் கர்ணனைக்கொல்லத் தனக்குப் பாசுபதாஸ்திரம் அருளுமாறுவேண்டினன். இறைவனும் அவன் வேண்டியவாறு பாசுபதாஸ்திரம் வழங்கினர். தன் பெயரால் தீர்த்தமும் சிவலிங்கமும் வழங்கவேண்டுமென்று அருச்சுனன் வேண்ட இறைவனும் இசைந்தார். அருச்சுனன் விரும்பியபடி சிவலிங்கம் பல்குனலிங்கம் எனவும், தீர்த்தம் பல்குன தீர்த்தம் எனவும் வழங்கப்படுகின்றன.

பார்வதி தவம் : சிவபெருமானைப் புறக்கணித்துத் தக்கன் செய்த வேள்விக்குத் தந்தைப்பாசத்தோடு அழைப்பில்லாமலே சென்ருள் அம்பிகை. தக்கன் அம்மையையும் பெருமானையும் இகழ்ந்துரைத்தான். அதனுல் தக்கன் மகள் என்ற பெயர் நீங்குமாறு அம்பிகை இறைவனை வேண்டினுள். இறைவன் அருளிபடி அம்பிகை சமீவனம் என்னும் இத்தலத்தில் காத்தியாயன முனிவருக்கு மகளாய்ப்பிறந்து பன்னிரண்டு ஆண்டுகள் தவம் புரிந்தாள். இறைவன் காட்சியளித்து அம்பிகையைத் திருமணம்புரிந்து ஆட்கொண்டருளிப் பார்வதீஸ்வரன் என்ற பெயரைப்பெற்ருர்.

இந்திரன் பழி நீங்கியது : இந்திரன் கௌதமமுனிவரின் மனைவி அகலிகையை விரும்பிய குற்றத்திற்காக அம்முனிவரால் சாபம் பெற்ருன். அப்பழி நீங்குதற்காக இத்தலத்திற்குவந்து அருள்மிகு பார்வதீசுவரரை வணங்கி அருள் பெற்ருன்.

வேடர் பழி நீங்கியது : இரண்டு வேடர்கள் அடைக்கலமாகத் தங்களை அடைந்த மானைக் கொன்ற பழி நீங்கிட, இத்தலத்திறைவரை வழிபட்டு வீடுபேறு பெற்றனர்.

மார்க்கண்டேயருக்குக் காட்சி கொடுத்தது : மிருகண்டுமுனிவரின் புதல்வர் மார்க்கண்டேயர். அவருக்கு ஆதியில் இறைவன் அளித்த வயது பதினுறு. அதை எண்ணி மனம் வருந்திய தந்தை தாயரின் வருத்தத்தைப்போக்க மார்க்கண்டேயர் பல தலங்களுக்கும் சென்று சிவபெருமானைப் பூசித்தார். அவ்வாறு இத்தலத்துக்கு வரும்போது அருள்மிகு பார்வதீசுவரர் அவருக்குக் காட்சிகொடுத்துத் திருக்கடவூர் வருமாறு அருள்புரிந்தார்.

திருவிழாக்கள் : நாடோறும் ஆறுகால வழிபாடுகள் நிகழ்கின்றன. வைகாசிமாதத்தில் தெளிச்சேரி என்ற இத்தலப்பெயருக்கு ஏற்ப இறைவன் கிராதவேடத்தோடு வயற்சேரிக்கு எழுந்தருளுகிருர். எல்லோருக்கும் விதை வழங்கும் விதை தெளிவிழா சிறப்பாக நிகழ்கிறது. மற்றும் விசேஷ காலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கட்டுரை எண். 2.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A,. D, U. N. I. U,

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உமாபதியாகிய சிவபெருமான் எட்டு விதமான வீரச்செயல்கள் புரிந்தருளிய தலங்களும் "அஷ்ட வீரஸ்தானம்" எனப்பட்டன. இதனையே தமிழில் "அட்ட வீட்டானம்" என்பர். மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால்கடிந்த தலமே திருக்கடவூர். மூவர் முதல்வர்களும், அருணகிரியாரும் அருந்தமிழ்ப்பாக்களால் போற்றிப் புகழ்ந்த புண்ணிய பூமி அது.

அமுதம் கடைந்தெடுத்தபொழுது அவ்வமுதக்குடம் இங்கே வைக்கப்பெற்றது. அக்குடம் பின்னர் சுவயம்பு லிங்கமாக உருவெடுத்த காரணத்தால் இத்தலம் திருக்கடவூர் என்று அழைக்கப்பட்டது. ஈசர் திருநாமம் அமிர்தகடேஸ்வரர் என்பதாகும்.

இத்திருத்தலத்தில் பிரமன் தவமியற்றி இருக்கிறன். குங்குலியக் கலயநாயனுர். காரிநாயனுர் ஆகியோரும் திருவவதாரம் செய்தருளியிருக்கின்றனர்.

மாயூரத்திலிருந்து பதின்மூன்றுகல் தொலைவில் உள்ள இத்திருத்தலத்தில் அந்தணர் குலத்தில் அமிர்தலிங்க அய்யருக்கு மகனுகத் தோன்றினுர் 'சுப்பிரமணியம்' என்னும் இயற்பெயர் பெற்ற அபிராமி பட்டர்.

வடமொழி, தென்மொழி இரண்டினையும் கசடறக் கற்ற சுப்பிரமணிய அய்யர் சிறந்த ஸ்ரீவித்யோபாசகர். வேதம் சொன்ன வழியில் அன்னையின் அடிபோற்றி அவளுருவை அகத்தே கண்டு வந்தார்; கண்டு உவந்தார்.

இவ்வாறு அன்னையின் திருக்கோலத்தினையே இடையருது நினைத்து வேறு உலகியல் விஷயங்கள் எதிலும் நாட்டமின்றி வாழ்ந்து வந்த சுப்பிரமணிய அய்யரை அவ்வூர் மக்கள் "பித்தர்"

என்று எண்ணினர். காளியன்னையின் தரிசனத்துக்கு ஏங்கியழுத இராமகிருஷ்ணரையும் அப்படித்தானே எண்ணினர். மற்றும் சுப்பிரமணிய ஐயர் ஏதோ துர்தேவதையினை வழிபடுவதாகவும் கள்ளையும் மதுவையும் உண்டு மயக்கநிலை எய்துவதாயும் வதந்திகளைப்பரப்பினர்.

அவை அத்தனையும் அவர் பொருட்படுத்தவில்லை. அனைத்துலகினையும் அன்னையின் திருவடிவாய்க்கண்டு மகிழ்ந்து வந்த அவர் அயலாரின் கருத்துப்படி வாழ விரும்பினரில்லை.

மேலோர் சொன்ன பரஆகம வழியில் அன்னையின் அருளானந்தத்தில் திளைத்துவந்தார்.

அமுதீசர் ஒருபாகம் அகலாத அபிராமியின் சன்னதியில் நின்று அவளழகைக் கண்டு பேரின்பம் எய்தி, பின்னர் அவ்வுருவினைக் கண் மூடித் தியானித்து அகக்கண்ணால் காணத்தொடங்கினால் அவருக்கு இவ்வுலக நினைவே இல்லை.

அபிராமியன்னையின் திருக்கோலத்தை அகக் கண்ணில் கண்டு தரிசித்து நின்றிருந்த சமயத்திலேயே தஞ்சைமன்னன் சரபோஜி அங்கு வந்து சேர்ந்தான்.

மன்னன் வருகையில் அங்கு ஏற்பட்ட ஆரவாரம் எதனையும் அறியாதவராய் அம்பிகை தியானத்தில் ஆழ்ந்திருந்தார் சுப்பிரமணிய ஐயர்.

அவரது தோற்றத்தினையும் விசித்திரமான போக்கையும் கண்டு ஐயுற்ற மன்னன் அருகில் இருந்தோரிடம் "யார் இவர்" என வினவினான்.

வழக்கம்போல் 'பித்தர்' என்றும் 'துர்தேவதை உபாஸகர்' என்றும் ஏளனமாய்க் கூறினர் மக்கள்.

அதைக் கேட்ட மன்னனும் "இவரிடம் பேசித்தான் பார்ப்போமே" என நினைத்தவனாய், "சுவாமி! இன்று என்ன திதி?" என்றான்.

பூரணசந்திரனுக்கு ஒப்பான அன்னையின் முகமண்டல தரிசனத்தைக்கண்டு திளைத்த நிலையில் இருந்த சுப்பிரமணிய ஐயர் செவியில் இக்கேள்வி விழுந்தவுடன் "இன்று பௌர்ணமிதான்" என்றார்.

அனைவரும் நகைத்தனர். மன்னனும் மற்றவரின் கூற்று 'உண்மை' என எண்ணினான்.

'என்னய்யா? இன்று அமாவாசைக்கு அடுத்த பிரதமை அல்லவா? நீர் பௌர்ணமி என்கிறீர்; இன்று சந்திரோதயம் ஏற் படுமா?' என்ருன்.

தனது நிஷ்டை கலைந்து சிறிது கண்விழித்துப் பார்த்த சுப்பிர மணிய ஐயர் தம்முன் மன்னன் நின்று வினவுவதைக் கண்டார். அன்னையின் அருளால் வந்தவார்த்தை பொய்யாகாது என்று நம்பினுர். ஆம்! மன்னவா! பௌர்ணமிதான். நிச்சயம் அன்னை யின் அருளால் நிலவு வரும் என்று கூறினுர்.

நூறு கயிறுகளைக் கொண்டு உரியொன்று கட்டி, அதன் கீழே தீக்குழியொன்று அமைத்து அவ்வுரியின்மேலிருந்து தனது இஷ்ட தேவதையினைக் குறித்து வேண்டிப்பாடி அத்தெய்வத்தை வர வழைத்துக் காட்டுவதாக அல்லது அருளைப்பெற்றுக் காட்டுவதாக சபதம் செய்து பாடும் வழக்கமொன்று பழங்காலத்தில் இருந்து வந் திருக்கிறது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இஷ்டதெய்வம் அருள் செய்யாவிடில் ஒவ்வொருகயிருக அறுத்து விடுவார்கள். மொத் தக்கயிறும் அறுபட்டுக் கடவுள் அருள் கிட்டவில்லையாயின் கீழே அமைக்கப்பட்ருக்கும் தீக்குழியில் விழுந்து பொசுங்கவேண்டியது தான். இப்படி, கவிபாடும் முறை "அரிகண்டம் பாடுதல்" எனப் படும். இவ்வாறு அரிகண்டம் பாடி மன்னன்முன் முழுநிலவை வரவழைத்துக்காட்டுவதாகச் சபதம்செய்து அதன்படியே உரிமேல் ஏறி அன்னையின் அருளை வேண்டிப் பாடத்தொடங்கினுர் சுப்பிர மணிய ஐயர்.

எழுபத்தெட்டு பாடல்கள் ஆயின. எழுபத்தெட்டு கயிறுகள் அறுந்தன. 'உனது முழுமதியன்ன முகத்தையும், முடியில் சூடிய நிலவையும், காதில் அணிந்த தாடங்கத்தையும், புன் முறுவலையும் என்னகத்தே கண்டதால் அல்லவா மன்னனிடம் அங்ஙனம் கூறி னேன்?' என்று அன்னையினைக்கேட்பதுபோல்,

செப்பும் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே.

என்ற பாடலைப் பாடியவுடன் அம்பிகை தனது தாடங்கத்தைக் கழற்றி, மன்னரும் மற்ருேரும் காண முழுமதியாகப் பிரகாசிக்கும் வண்ணம் எறிந்து அருள்செய்தாள். திருக்கடவூர் வீதியெல்லாம் தண்ணிலவின் பேரொளியாய்த் திகழ்ந்தது.

அன்பர் சொல்லை மெய்யாக்க அபிராமிசெய்த திருவிளையாடலைக் கண்டு அனைவரும் வியந்தனர். மன்னன் சரபோஜியும் வெட்கித் தலைகுனிந்தான். பிழைபொறுக்க வேண்டினான்.

உற்றுழி உதவிய உமையருளை நினைத்து உள்ளம்மிக்குருகி மீதமுள்ளபாடல்களையும் பாடி அருந்தமிழ் அந்தாதியைப் பூர்த்தி செய்து அவளடிக்குச் சூட்டினார் சுப்பிரமணிய ஐயர்.

மன்னிப்புக்கோரிய மன்னன் மானியங்கள் பெறவேண்டினான். மன்னனளிக்கும் செல்வத்தை மறுத்தார் பக்தர். எனினும் தனது தவறுகளுக்குப் பரிகாரமாகச் சிலவற்றை ஏற்கவேண்டும் என்று மன்றாடினான்.

அறுவடைசமயத்தில் 'களக்குறுணியாக' வேலிக்குக் குறுணி நெல் ஆதவன் அம்புலி உள்ளவரை பெறும் உரிமையினைச் செப்புப் பட்டயத்தில் எழுதிக்கொடுத்தான். மற்றும் அபிராமிபட்டர் என்றும் திருநாமம் சூட்டினான். 'தங்கள் பரம்பரையினர் அனைவரும் பாரதி என்னும் சிறப்பு விருதும் பெற உரிமையளித்தேன்' என்றான்.

தற்சமயம் திருச்சியில் வசித்துவரும் அமிர்தபாரதி என்னும் இவரது வழித்தோன்றலிடத்து அச்செப்புப் பட்டயம் இன்றும் இருக்கிறது. அபிராமிபட்டர் வசித்து வந்த வீடும் திருக்கடவூரில் இருக்கிறது.

"அமாவாசையினைப் பௌர்ணமி"

என்றது பற்றி ஆராய்ச்சி.

அபிராமிபட்டர் அமாவாசைக்கு அடுத்த பிரதமையினைப் பௌர்ணமி என்று கூறியதன் காரணம் அவர் அம்பிகையின் முகமண்டல தரிசனத்தை உள்ளே கண்டதுதான் என்று பொதுப்படையாக அனைவரும் அறிவர். அதன்காரணத்தை நாம் சாக்த ரீதியாக ஆய்வோம்.

1. குண்டலினி யோகதரிசனம்

நமது உச்சந்தலையில் சகஸ்ரகமலம் என்ற மிக சூட்சுமமான ஸ்தானம் இருக்கிறது. ஆயிரம் இதழ்களோடு கூடிய தாமரையின் வடிவில் அது அமைந்து இருப்பதால் சகஸ்ரகமலம் என்று அழைக்கப்படுகிறது. அம்பிகை அந்த ஸ்தானத்தில் எழுந்தருளி, தன் திருவடிகளிலிருந்து ஒருவித அமிர்தரஸத்தைப் பெருகச் செய்கிறாள்.

அது நமதுசரீரத்திலுள்ள எழுபத்திரண்டாயிரம் நாடிகளிலும் பாய்ந்து உயிரூட்டுகிறது. கண்ணுக்குத் தெரியாத நமது செல்லில் Cell Sap என்ற திரவம் இருக்கிறதென்று உயிரியல் விஞ்ஞானிகள் கூறுவதே இக்கருத்துக்கு அறிவியல் ரீதியான ஆதாரமாகும்.

பின்னர் அம்பிகை 'குண்டலினி' என்ற வடிவினை எடுத்துக் கொண்டு நமது தண்டுவடத்தின் இறுதியில் மூலாதாரம் என்ற ஸ்தானத்தில் உறைகிருள். மிகத் துல்லியமான நூலிழைபோன்ற வடிவினைக் குண்டலம் போட்டுக்கொண்டு அதாவது சுருட்டிக் கொண்டு எழுந்தருளுவதால் 'குண்டலினி என்று அழைக்கப்படு கிருள்.

சர்ப்பம் போன்று சுருட்டிக் கொண்டிருக்கும் இச்சக்தியினை சர்ஜான் உட் ரஃப் (Sir John wood Rolf) என்ற ஆங்கிலேய அறிஞர் Serpent Power என்று அழைத்தார்.

யோக சாஸ்திரப்படி தியானத்தில் அமர்ந்து இச்சக்தியினை உரியபடி மேலெழுப்பினுல் மணிபூரகம், ஸ்வாதிஷ்டானம், அனுஹதம், விசுக்தி, ஆஞ்ஞை என்ற எல்லா நிலைகளையும் கடந்து வந்து உச்சந்தலையில் இருக்கும் சகஸ்ரகமலத்தில் அம்பிகையின் பூரண தரிசனத்தைக் காணலாம். அது அம்பிகை பூரணசந்திரமண்டலத் தின்இடையில் திருக்காட்சி காட்டியிருக்கிருள். இவ்வாறு குண்டலினி சக்தியினை மேலெழுப்பி அம்பிகையை வழிபடும்முறை அந்தர் யாகம் எனப்படும்.

நமது உடலையே யாக குண்டமாக்கி குண்டலினியையே அக்கினியாக்கிச் செய்யும் இவ்வந்தர்யாகத்தின் மூலம் அன்னையை உள்ளே கண்டு ஆனந்த வாரிதியில் அபிராமிபட்டர் திளைத்திருந்த காரணத்திஞலேயே அன்று பௌர்ணமி என்று கூறினர். இந்தக் குண்டலினியோகத்தில் கூறப்படும் ஆறு ஆதாரங்கள் மூன்று கண்டங்கள் ஆகிய பல நிலைகளைக் கடந்த சகஸ்ரகமலமே "துவாத சாந்தப்பெருவெளி" என்று மீனுட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் குறிப்பிடப்படுகிறது. பூரண சந்திரப்பொலிவுடன் திகழும் 'சகஸ்ரகமல'ச் சிறப்பும் மற்ற ஆதாரங்கள் உள்ளிட்ட பன்னிரண்டு நிலைகளும் இவ்வாராய்ச்சிக் கட்டுரையின் பிற்பகுதியில்தனித்தனியே விளக்கப்படும்.

2. சௌந்தரிய லகரியின்படி தரிசனம்.

சௌந்தரிய லகரியில் "லலாடம் லாவண்யதுயுதி விமலம்" என்ற சுலோகத்தில் ஆதி சங்கரர் அம்பிகையின் நெற்றியினையும்,

கிரீடத்தினையும் வருணிக்கிருர். அவ்விடத்து "அம்பிகையின் நெற்றி கீழ்நோக்கிய பாதிமதியினைப் போன்று விளங்குகிறது என்றும்' சிரசில் அணிந்திருக்கும் கிரீடத்தில் தரித்துள்ள சந்திரன் மேல் நோக்கிய பாதிமதியாய் விளங்குகிறது என்றும், ஆகவே மேல் நோக்கிய பாதிமதியினையும் கீழ்நோக்கிய பாதிமதியினையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் பூரண நிலவு பூத்திருப்பதுபோல் காணப் படுகிறது என்றும் வருணிக்கின்ருர். இச்சுலோகத்தில் கூறியபடி தியானிப்பவர்களுக்கு என்றும் பௌர்ணமியாகவே தோன்றுமென்றும் சௌந்தரிய லகரிக்கு மஹாபாஷ்யம் எழுதிய சாஸ்திர ரத்னகரம் தேதியூர் பிரும்மஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்கள் விளக்கியிருக் கிருர்கள்.

அத்துடன் அவர்கள் வேலூர் மன்னன் சின்னப் பொம்மாவின் அரசவையில் இருந்த ஸ்ரீ ரத்னகேட தீட்சிதர் என்ற தேவிஉபாஸகர் மேற்கூறியபடி தியானித்திருந்த சமயம் தவறுதலாக அமாவாசை யினைப் பௌர்ணமி என்றுகூறிவிட்டதாயும், மன்னன் அவரைப் பித்தரோ? என்று ஐயுற்றதாயும், அன்று இரவு அம்பிகையின் தாடங்கத்தின் ஒளியினுல் முழுநிலவு தோன்றி அவரது கருத்தை நிருபித்ததாயும் எழுதியிருக்கிருர்கள்.

அபிராமிபட்டர் ஆதிசங்கரருக்குப் பிற்காலத்தவர். சாக்த ஆகம நூல்கள் அனைத்தும் கற்றவர். ஆகவே அவர் சௌந்தரிய லகரியில் கூறியவண்ணம் தியானம் செய்திருக்கக் கூடும். அபிராமிபட்டர் அதற்கு அகச்சான்று கூறுவதுபோல் "துப்பும் நிலவும் எழுதிவைத் தேன் என்றன் துணைவிழிக்கே" என்று பாடுகிருர்.

3. நீதியினைக் காட்டும் நிகழ்ச்சி

உலகனைத்தையும் தாய்மையுணர்வுடன், தேவியின் ஸ்வரூப மாக (வடிவாக) நோக்கிவாழும் தேவிஉபாஸகர்களுடைய உள்ளமும் வாழ்வும் எப்போதும் ஒளிமயமாகவே அமைகிறது என்ற தத்துவ நீதியினையே இவ்வரலாறு விளக்குகிறது.

4. ஸ்ரீசக்ரத்தின் பெருமை

தாடங்கத்தின் மூலம் நிலவைக்காட்டிய வரலாறு ஸ்ரீ!சக்கரத்தின் பெருமையினையே காட்டுகிறது. அம்பிகையின் தாடங்கம் ஸ்ரீ சக்ர ரூபமாகும். இது பற்றிய விளக்கத்தை எழுபத்தொன்பதாவது பாட்டின் ஆராய்ச்சியுரையில் காண்போம்.

5. தேவியின் அருளைப்பெறக் குழந்தையுள்ளம் வேண்டும்

தாயின் பாலுக்கு அழும் குழந்தையைப்போல் அம்பிகையின் அருளுக்கு ஏங்கி அழவேண்டுமென்று இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுவார்.

தீபாவளிக்குப் புத்தாடை அணியவேண்டுமென்று அறிந்த ஒரு குழந்தைக்குச் சாதாரணநாளில் புத்தாடை வாங்கிக் கொடுத்தால் அக்குழந்தை அடுத்த வீட்டுக் குழந்தையிடம் "இன்று எங்கள் வீட்டில் தீபாவளி" என்று மழலைபேசும். புத்தாடை அணியும் நாள் அக்குழந்தைக்குத் 'தீபாவளி' யாகும். அதுபோல அம்பிகைக்கு மிகவும் உகந்தநாள் பௌர்ணமி. அன்று அம்பிகைக்குச் சிறப்பான பூசைகள் நடத்தவேண்டும். மன்னனின் வருகைக்காக விசேஷ பூஜைகள் நடப்பதைக்கண்டவுடன் அன்று பௌர்ணமி என்று எண்ணிவிட்டார்போலும்.

புத்தாடை அணியும் நாளைத் 'தீபாவளி' என்று எண்ணும் குழந்தையுள்ளம் கொண்ட அபிராமிபட்டர் அன்னைக்கு விசேஷ பூஜைகள் நடந்தநாளைப் 'பௌர்ணமி' என எண்ணியதில் வியப் பில்லையன்றோ?

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

இன்று குடும்பத்தாருடன் இத்திருக்கோயிலில் தரிசனம்செய்யும் பெரும்பேறு பெற்றேன். இங்குள்ள நிர்வாகிகளின் பெரும் உதவி யால் பூர்ணமாகத் தரிசனம் செய்யும் பெரும் பாக்கியம் கிட்டியது. இக்கோயில் நிர்வகிக்கப்படும்முறை மிகவும் பாராட்டவும் போற்றவும் தக்கது. நிர்வாகிகள் அனைவருக்கும் என் உளமார்ந்த மகிழ்ச்சியை யும் நன்றியையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

(ஒ-ம்) V. P. வீரப்பன்,
உதவி இயக்குனர்,
செய்தி மக்கள் தொடர்புத்துறை,
6—1—80. சென்னை - 9,

மாணிக்கவாசகரும் —
— மாதியலும் பாதியனும்

சிவமணி புலவர். திரு. ம. சிவசம்பு பி. லிட்.

உலக இயற்கை அமைப்பினைக் கூர்ந்து கவனித்தால் உலகில் உள்ள உயிர்கள் அனைத்திலும் ஆண் பெண் பாகுபாடு அமைந் திருத்தலை அறியலாம். மரம் செடி கொடிகளிலும் ஆண் பெண் அமைப்பு தவறுமற் பொருந்தியுள்ளது. திருஞானசம்பந்தப் பெருமான் அடியவர்களுக்காகத் திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைக ளாக்கினுர். உயிரற்ற பொருளாகிய சாவிகளில் தண்டுச் சாவியை ஆண் சாவி என்றும், குழல் உள்ள சாவியைப் பெண் சாவி என்றும் கூறுகிருர்கள். கல்லிலும் ஆண்கல் பெண்கல் உண்டு என்று சிற்பிகள் கூறுகிருர்கள். இயற்கை இப்படி அமைந்திருந்தாலும் சில நேரங்களில் ஆண்கள் உயர்ந்தவர்கள் என்றும், பெண்கள் தாழ்ந்த வர்கள் என்றும் பேசியும் கருதியும் வருகிருேம். ஆண் இன்றேல் பெண் இல்லை. பெண் இன்றேல் ஆண் இல்லை. சக்தியில்லையேல் சிவம் இல்லை. சிவம் இல்லையேல் சக்தியில்லை. ஆணும் பெண்ணும் ஒருவர்க்கொருவர் இன்றியமையாதவராய் இருக்கின்றனர். அவ்விரு வரும் அன்பால் பண்பால் உற்றதுணையாய் இருக்கவேண்டும். இதை உயிர்கள் உணர்ந்து இன்பம்பெறவேண்டும் என்ற பெருங்கருணையால் சிவமும் சக்தியும் ஒருவடிவத்தில் அம்மையும் அப்பனுமாக - அர்த்த நாரீஸ்வரராக எழுந்தருளி உள்ளனர். இத்திருவுருவம் மாணிக்க வாசகரைப் பெரிதும் கவர்ந்தது.

> " ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
> பாகம் பெண்ணுரு ஆனுய் போற்றி "

என்று போற்றித் துதிக்கலானுர்.

உமையொருபாகர் :

சிவனையும் சக்தியையும் அம்மையப்பராகக் காட்சிதரச்செய்த பெருமை பிருங்கி முனிவரைச்சாரும். பிருங்கிமுனிவர் சிவவழிபாட்டுப் பிரியர். ஒருசமயம் அவர் திருக்கயிலை மலைக்குச் சென்ருர். அங்கே சிவபெருமானும் பார்வதியும் ஒருங்கு எழுந்தருளியிருந்தனர். பிருங்கி

அவ்விருவரையும் ஒருசேர வணங்காமல் ஒரு வண்டின் உருவம் கொண்டு சிவபெருமானைமாத்திரம் வலங்கொண்டு வணங்கினர். இதைக்கண்ட அம்பிகை, தாம் சிவபெருமானின் வேருகப்பிரிந்து இருத்தலினுல் அன்ருே இந்நிலை ஏற்பட்டது; தாம் இறைவனேடு பிரிவறக்கலந்துநிற்கும் பெருநிலையைப் பெறவேண்டும் என்று நினைத் தார்; அதற்காகத் தவமும் செய்தார். அத்தவத்திற்கு மகிழ்ந்து சிவபெருமான் தம் உடம்பில் இடப்பாகத்தை அம்பிகைக்குக் கொடுத் தருளினுர். இங்ஙனம் ஒரு திருமேனியில் வலப்பாகத்தில் சிவனும் இடப்பாகத்தில் அம்பிகையுமாக விளங்கும் காட்சியே அர்த்தநாரீ சுவர வடிவம் எனப்படும். அர்த்தம் - பாதி. நாரி - பெண். பாதி பெண்ணும் பாதி ஆணுமாக இருக்கும் இறைவனை அம்மையப்பர் எனவும் உமையொருபாகர் எனவும் வணங்குகின்ருேம்.

ஏழைபங்காளன் :

மாணிக்கவாசகர் அம்மையப்பர் திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்தார்.

" குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க " (3. 151, 152.)

' பஞ்சுஏர் அடியாள் பங்கா போற்றி ' (4-184.)

' பெண்சுமந்த பாகத்தான் ' (அம்மானை 8-2.)

' மாதுஇயலும் பாதியன் ' (அம்மானை 19-3.)

' மாதாடும் பாகத்தான் ' (பொன்னூசல் 6-1.)

' மாதிவர்பாகன் ' (திருவார்த்தை 1-1.)

' மட்டுவார் குழல்மங்கையாளை ஓர்பாகம் வைத்த அழகன் ' (சென்னிப்பத்து 2-3.)

' ஏழைபங்காளனையே பாடு ' (திருவெம்பாவை 9-8)

(ஏழை - பெண்.) என்றெல்லாம் போற்றினுர்.

தொன்மைக்கோலம் :

அம்மையப்பர் காட்சியைக்கண்ட மாணிக்கவாசகர் நாமும் அக் காட்சியைக் காணவேண்டும் என்று விரும்பினுர். அரசவண்டாகிய கோத்தும்பியை அழைத்துக் கூறுவதுபோலக்கூறி அத்தொன்மைக் கோலத்தை நமக்குக் காட்டுகிருர்.

அரசவண்டே! சிவபெருமான் அம்மையப்பராகத் திகழ்ந்து அருள்கின்றனன். அத்திருக்கோலம் ஆண் பெண் இயைந்த மாண்பார் வடிவமாகும். வலப்பாகத்தே புலித்தோலும், குழையும், பால் போலும் வெள்ளிய திருநீறும், முத்தலைவேலாகிய சூலமும் அணிந்திருக்கிறார். இடப்பாகத்தே மெல்லிய ஆடையும், சாந்தும், பசிய நிறமிக்க கிளியும், தொகுதியாக அமைந்த பல வளையல்களும் அணிந்திருக்கிறார். இத்திருக்கோலத்தினைக்கண்டுகளித்து உள்ளங்குளிர்ந்து இன்பமாக ஊது வாயாக என்று பாடுகிறார்.

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்கவளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கி குளிர்ந்து ஊதாய் கோத்தும்பீ !

(கோத்தும்பீ –18)

அம்மையப்பர் திருக்குளம்:

மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் பங்கயப்பூம்புனலில் தாமரைமலர், குவளைமலர், குருகு, அரவம் முதலியவைகளைக் காணுகின்றார். பொய்கையில் வந்து குளிப்போரைக் காணுகின்றார். அவருக்கு அம்மையும் அப்பனும் ஒத்திசைந்திருக்கும் அருட்காட்சி தெரிகிறது. அதை நமக்கும் காட்டுகிறார்.

குவளைமலர் இறைவியின் நிறத்தையும் குருகினம் அம்மையின் அடுக்கிய பலவகை வளையல்களையும் நினைவூட்டுகின்றன.

பொய்கையிலுள்ள செந்தாமரைமலர் இறைவனது தீவண்ணத்தையும், அரவம் சர்ப்பமாகிய அவரது ஆபரணங்களையும் நினைவூட்டுகின்றன.

வந்து குளிப்போர், அம்மை அப்பர் அருள்வெள்ளத்தில் குளிப்பதை நினைவூட்டுகின்றனர். காட்சி பாடலாக வெளிவருகிறது.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குரு (கு) இனத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலம் கழுவு வார்வந்து சார்தலினுல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன் (று) இசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந் (து) ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆ (டு) ஏலோர் எம்பாவாய்.

(திருவெம்பாவை –13)

மாணிக்கவாசகர் கன்னிப்பெண்களெல்லோரையும் அழைத்து அம்மையப்பர் திருக்குளத்தில் பாய்ந்து பாய்ந்து நீராடச் சொல்கிறார்.

இவ்வழகிய பாடல் மானசதீட்சை, பரிசதீட்சை, நயனதீட்சை ஆகிய தீட்சை முறையையும்உள்ளுறையாகக் கொண்டுவிளங்குகிறது.

பைங்குவளைக்கார்மலர் (கண்)	—	நயன தீட்சை (காண்டல்)
செங்கமலப்பைம்போது (நெஞ்சம்)	—	மானசதீட்சை (கருதுதல்)
குருகு (சிறகால்குஞ்சுகளைத்தழுவுதல்)	—	பரிசதீட்சை (தீண்டல்)
அரவம் (சப்தம்)	—	ஐந்தெழுத்து (ஓதுதல்)

முடிவுரை:

இவ்வாறு ஞானத்தின் கருவூலமாக விளங்கும் திருவாசகத்தை ஓதுதலும் ஓதுவித்தலும் நம்மனோர் கடமையாகும்.

நாவரசரின் நகைச்சுவை

"திருத்தொண்டர்"

வித்துவான் திரு. ந. சண்முகசுந்தர தேசிகர்

மனித உறுப்புக்களில் தலை, சிறப்புடையது. அதிலும் மிகச் சிறப்புடையது கண்ணாகும். கண்ணில்லாத ஓர்குருடன் இவ்வுலக இயற்கைக் காட்சிகளையும், கட்புலனால் வரும் இன்ப நுகர்ச்சியையும் காண்டலும், அனுபவித்தலும் இயலாது. ஒருவனுடைய உள்ளக்கிடக் கையை அவனது கண்களே வெளிப்படுத்தும். புதிதாக வரும் விருந் தினர், ஒருவருடைய விருப்பு வெறுப்பினை அவரது கண்நோக்கி லிருந்தே அறிந்துகொள்வர்.

இதனைத் திருவள்ளுவர்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்றார்.

வாயின்மூலம் கருத்தினை அறிந்துகொள்வதைக் காட்டிலும் கண் மூலம் அறிந்துகொள்ளுதல் சிறந்த பயனுடையதாகும். வாயின் மூலம் கருத்தினை அறிந்துகொள்ளும்போது அருகில் நிற்கின்ற மற்ற வரும் அறிந்துகொள்ள வாய்ப்புண்டு. சில மறைவான கருத்துக் களைப் பிறர் அறியாவண்ணம் தெரிவிப்பதில் வாய்ச்சொற்களைக்காட்டி லும் கண் சிறப்புடையதெனத் திருவள்ளுவரே,

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்ற குறட்பாவினால் தெளிவுபடக் கூறியுள்ளார்.

காதலர் இருவர் தம்முள் தமது வேட்கையைக் கண்களினாலேயே அறிவித்துக்கொள்வர் என்பதை,

"நாட்டமிரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்"

என்ற களவியல் சூத்திரத்தால் தொல்காப்பியரும் அறிவிக்கின்றார்.

இதற்கு இலக்கியமாகச் சைவ வேதியராம் ஆளுடைய நம்பி யாரின் கண்கள், திருவாரூரில் அடியார் புடைசூழப் புற்றிடங்கொண் டாரைத் தொழுது செல்லும்போது "வில்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை பரவையாரைக் கண்டன" என்றும், பரவையார் கண் களும் "அண்டர்பிரான் திருவருளால் அயல் அறியாமனம் விரும்பப் பண்டைவிதி கடை கூட்டக் கண்டன" என்றும், நம்பியாரூர் திரு வொற்றியூர் அடைந்தபோது, "மின்போல் மறையும் சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்ருர்" என்றும் சேக்கிழார் கூறியிருத் தலையும், இராமபிரான் மிதிலை சென்றபோது,

"எண்ணரு நலத்தினு ளிளையள் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கௌவி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெரு துணர்வும் ஒன்றிட
அண்ணலு நோக்கினு னவளும் நோக்கினுள்"

என இருவர் கண்களும் ஒன்றையொன்று கௌவிக்கொண்டு உணர் வொன்றிட இருவரும் கண்டனர் என்றும் அதனுல்,

"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை யொருவர்தம் உள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினுர்"

என இருவர் உள்ளக் கிடக்கையும் ஒன்று பட்டன என்றும் கம்பர் கூறியிருத்தலையும் நோக்குக.

இதனுல் கண்கள் உள்ளக்கிடக்கையைப் பிறர் அறியாவண்ணம் தெரிவிப்பதில் எவ்வளவு சிறப்புடையனவாக விளங்குகின்றன என்பது புலப்படும். அதிலும், முழுக்கண்ணுல் தம் கருத்தைத் தெரி விப்பதைக் காட்டிலும் அரைக்கண் பார்வையால் தெரிவித்தல் இன்னும் சிறப்புடையது. அதனுல் தான் உலகவழக்கில் 'அரைக் கண்ணுல் சாடைகாட்டினுன்' என்ற பழமொழி வழங்கப்படுவதை நாம் அறிவோம். ஆனுல் உறுப்பில் பாதிகண்ணுடையோர் இவ் வுலகில் ஒருவருமிலர். "இன்றரைக் கண்ணுடையார் எங்கும் இல்லை" என்று கூறிய நமது நாவரசரே அரைக்கண்ணுடையார் ஒருவருளர் என்று நகைச்சுவை தோன்றக் கூறியிருத்தலைக் காணலாம்.

ஞாயிற்றை வலக்கண்ணுகவும், திங்களை இடக்கண்ணுகவும், நெருப்பை நெற்றிக்கண்ணுகவும் கொண்டு முக்கண்ணனுக விளங்கும் இறைவர், உமாதேவிக்குத் தன் உடம்பில் இடப்பாதியைத் தந்து மாதொருபாகனுக விளங்கிய காரணத்தால் முக்கண்ணில் பாதியாகிய

ஒன்றரைக்கண் மாதுக்குரியதாயிற்று. எனவே, இறைவன் ஒன்றரைக் கண்ணனாக விளங்குகின்றார் என்று நகைச்சுவைபட நாவரசர் திருவொற்றியூர் பிரானை நோக்கிப் பாடியுள்ளார்.

அப்பாடல் வருமாறு :-

" இன்றரைக் கண்ணுடையார் எங்குமில்லை இமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட் பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமை யாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூருறை உத்தமனே."

இதிலிருந்து அறியப்படும் உண்மை யாதெனின், ஒரு பொருளின் சக்தி - ஆற்றல் அதனோடு கலந்தே காணப்படுவது; வேறு பிரித்தல் என்பது இயலாது. உதாரணமாகத் தீயில் வெப்பம், நீரில் தண்மை, திலத்தில் ஈர்ப்புப் போன்றவைகளாகும்.

பொருளை ஆணாகவும் அதன் சக்தியை - ஆற்றலைப் பெண்ணாகவும் உருவகம் செய்து கூறுதல் முன்னோர் மரபு. அதன்படி இறைவனாக உள்ள பொருள் ஆணாகவும் அவனுக்குள்ள ஆற்றலை - சக்தியைப் பெண்ணாகவும் கொண்டு மாதொரு பாகனாக வழிபடுகின்றோம்.

உலகம் பெண் ஆண் மயமாயிருத்தல் கண்கூடு " அவன் அவள் அது எனும் அவை" என்ற சிவஞான போதத்தாலும், " ஒருவனோடு ஒருத்தி ஒன்றென்று உரைத்திடும் உலகமெல்லாம்" என்ற சிவஞான சித்தியாலும் உணர்க. புல் முதல் மக்கள் ஈறாக உள்ள எல்லா உயிர்களும் ஆண் பெண் மயமாகவே இருக்கின்றன. காரிய உலகம் ஆண் பெண் மயமாக இருத்தலான் அதைச் செயற்படுத்தும் காரணப்பொருளும் ஆண் பெண் மயமாக இருத்தல்வேண்டும் என உட்கொண்டு உலகுக்குக் காரணமாக விளங்கும் பரம்பொருளைச் சக்தி சிவமாக - மாதொரு பாகனாகக் கொண்டனர் முன்னோர்.

திருவள்ளுவரும், ஆதிசக்தியைப் பாகமாக உடைய இறைவன் உலகுக்கு முதல்வன் என " ஆதிபகவன் முதற்றே உலகு" என்றார்.

அப்பரடிகள் திருவையாற்றில் கண்ட கயிலைக் காட்சியைக் கருதுக. சராசரம் முழுவதும் சக்தியும் சிவமுமாகக் கண்டனர். அப்போது அருளிய " மாதர் பிறைக் கண்ணியானை" என்ற திருப்பதிகத்தின் பொருளை நோக்கினால் நன்கு விளங்கும். " ஆணெலாம் இறைவன் பெண்ணெலாம் தேவி" — எனச் சைவபுராணம் கூறும்.

அதுமட்டுமல்ல; பெண்ணுக்கு உரிமைவழங்கும் இக்கால முறை புதிதல்ல. பண்டுதொட்டே சைவம் தோன்றிய முதற்கொண்டே அமைந்துள்ளது. சமுதாயத்தில் பெண்ணுகளுக்கும் உரிமை உண்டு என்பதை விளக்கும் முகத்தால் நம் முன்னேர் இறைவனை மாதொரு பாகனுகக் கண்டனர். உடம்பில் சரிபாகமாக உமைக்குக் கொடுத்துச் சிவனைக்கண்டது நமது சமயம்.

சமுதாய அமைப்பிலும் அவ்வாறே காணவேண்டுமென்பது அப்பரடிகளின் கருத்தாகும். என்னெனில் அவரது காலத்தில் சமண, பௌத்த சமயங்கள் பரவி, பெண் உரிமை பறிக்கப்பட்டது. அதனுல் மீண்டும் தமிழ்ச்சமுதாயம் பெண்ணுரிமை வழங்கி உயர்வடைதல் வேண்டும் என்பதால் நகைச்சுவையிலே இமயமென்னும் குன்றை உடைய இறைவன் குலமகட் பாவைக்குக் கூறிட்ட நாள் அன்று முக்கண்ணில் ஒன்றரைக்கண்ணும் கொடுத்துத் தானும் ஒன்றரைக் கண்ணனுக விளங்கும் தன்மையைக் காணுங்கள் எனக் கூறுகின்ருர். என்னே! நகைச்சுவையின் இனிமை.

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி

வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

ஆண்டிடும் ஆப்பனூர் குரவங் கமழ்குழ
லம்மை பரங்குன்றமே
ஆவுடை நாயகி திருவே டகத்தனில்
அருளேல வார்குழலியே
தீண்டிடும் வினைநீக்கி யாளுங்கொ டுங்குன்றம்
சேர்ந்துநல் வரமீந்திடும்
தேவிகுயி லமிர்தநா யகிதிருப் புத்தூர்ச்
செல்விசிவ காமியம்மை
நீண்டிடும் செஞ்சடையன் உறைதிருப் புனவாயில்
நிலவுகரு ணைநாயகி
நிகரிலாத் திருஇரா மேச்சுரம் மேவிவாழ்
நிமலிமலை வளர்காதலி
பாண்டிய குமாரிஆ டானைஅம ரன்பாயி
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள்அன்னையே. (25)

செய்திகள்

ஆயில்யத்திருநாள் வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு, 1—2—80 வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் திருவேட்டக்குடி அருள்மிகு திருமேனியழகர் திருக்கோயிலிலும் மாலை 6 மணியளவில் திருத்தெளிச்சேரி அருள்மிகு பார்வதீசுவரர் திருக்கோயிலிலும் சிறப்பாக நடைபெற்றன. ஆங்காங்கும் சுவாமி அம்பாளுக்கும் மற்றுமுள்ள மூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. திருக்கடவூர் தேவஸ்தானம் திருமுறைப்பணியாளர் திரு. நடராஜ ஓதுவார் தலத்திருப்பதிகங்களைப் பாராயணம் செய்தார். ஆதீன வெளியீடாக அச்சிடப் பெற்ற தலத்திருப்பதிக வெளியீடுகள் வழி பாட்டின்போது அன்பர்களுக்கு வழங்கப்பெற்றன. திருவேட்டக் குடியில் தருமையாதீனக் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ., திருமுறைப் பெருமை என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர். மாலை திருத்தெளிச்சேரி வழிபாட்டின் போது திருநள்ளாறு கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில் கரைக்கால் பேராசிரியர் திரு. இரா. கணேசநம்பி எம். ஏ., அடியார்பெருமை என்பது பற்றியும், காரைக்கால் தமிழாசிரியர் புலவர் திரு. மு. கருணாநிதி தலப்பெருமை என்பது பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர். காரைக்கால் திரு. சிவ. கைலாசநாதன் அனைவர்க்கும் நன்றிகூற வழிபாட்டு விழா இனிது நிறைவெய்தியது. அன்பர்கள் பலரும் வந்து தரிசித்தும் கேட்டும் இன்புற்றனர்.

தருமையில் ஏகதினலக்ஷார்ச்சனை

தருமையாதினத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அருள் வழங்கிவரும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு 8—2—80 தை கடைவெள்ளியன்று உலகநலங் கருதி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் ஏகதினலட்சார்ச்சனை காலை 7-மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. மாலை விசேஷ அபிஷேக அலங்காரங்களும் இரவு 8 மணியளவில் லட்சார்ச்சனை பூர்த்தி ஆராதனையும் நிகழ்ந்தன. ஆதீனத்தேவாரப் பாடசாலை மாணவர்கள் அபிராமி அந்தாதி பாராயணம் செய்தனர். அன்பர்கள் வழிபட்டு அம்மையருள்பெற்று இன்புற்றனர்.

வேளூரில் தைச்செவ்வாய் திருவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் என வழங்கும் புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குத் தைச்செவ்வாய்த் திருவிழா 3—2—80 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கிச் சிறப்பாக நிகழ்கிறது. திருவிழா நாட்களில் காலை மாலை விசேட அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமி நாடோறும் திருவுலாக்காட்சிகொண்டருளினர். 11—2—80 திங்கட்கிழமை பெருமான் புஷ்பத்தேரில் பவனிவருதல் பேரின்பம்தரும் காட்சியாகும். மறுநாள் ஆலயத்திலுள்ள சித்தாமிர்த தீர்த்தத்தில் கடைச்செவ்வாய் தீர்த்தவிழா நிகழும். நாடோறும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி சந்நிதியில் ஆதீனக்கல்லூரி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் முருகப்பெருமான் அருள்நூல்களைப்பற்றிச் சொற்பொழிவு ஆற்றிவருகின்றனர். தேவஸ்தானத் திருமுறைப்பணியாளரின் திருமுறைப்பாராயணமும் நிகழ்கின்றது.

திருச்சி மௌனமடத்தில்

ஸ்ரீ மௌனகுரு - ஸ்ரீ தாயுமானசுவாமிகள்குருபூஜை

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருச்சி மலைக்கோட்டை மௌனமடம்மௌனகுருவிற்குப், அவர்களிடம்அருளுபதேசம்பெற்று அருளனுபவப் பாடல்கள் இயற்றிய தாயுமானசுவாமிக்கும் அவர்கள் திருவருட்பேறெய்திய விசாக நட்சத்திர நன்னாள் 9—2—80 சனிக்கிழமையன்று குருபூஜைவிழா சிறப்பாக நடைபெற்றது. மலைக் கோட்டை ஸ்ரீ மாணிக்க விநாயகர், ஸ்ரீ உச்சிப்பிள்ளையார், ஸ்ரீ மட்டுவார் குழலம்மை ஸ்ரீ தாயுமானேசுவரர் முதலிய மூர்த்திகளுக்கும் ஸ்ரீ மௌனகுருவிற்கும், ஸ்ரீ தாயுமான சுவாமிக்கும் காலை 9 மணி அளவில் விசேட அபிடேக அலங்கார ஆராதனைகள் நிகழ்ந்தன. பகல் 11 மணி அளவில் குருபூஜையும், அடுத்து மாகேஸ்வரபூஜையும் நடைபெற்றன.

மாலை 6 மணி அளவில் மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் சொற்பொழிவு நிகழ்ச்சி தொடங்கியது. திருமுறைப்பாராயணத் திற்குப்பின் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அனைவர்க்கும் வரவேற்புரை கூற, திருச்சி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் திரு. சி. எஸ். தீனதயாளு பி எஸ்ஸி. பி. எல். அவர்கள் தலைமையில் தருமையாதீனப்புலவர். கீர்த்தன தலசேகர எம்பார். திரு. S. விஜய ராகவாசாரியார் குழுவினர் திருஞானசம்பந்த சுவாமிகளைப் பற்றி இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தினர். நன்றியுரைக்குப்பின் அன்பர்களுக்குக் குருவருட்பிரசாதம் வழங்கப்பெற்றது.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

சித்தார்த்தி௵ மாசிமீ 1௳ முதல் 30௳ முடிய.

(13—2—80 முதல் 13—3—1980 முடிய)

ஸ்ரீ சித்தார்த்தி௵ மாசிமீ 1௳ புதவாரம் பூராட நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 3 நாழிகை 45 விஞடிக்கு. கும்பலக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மகர ராசியிலிருந்து கும்ப ராசி சங்கிரமணமாக மாசி மாதம் பிரவேசம் செய்கின்ருர். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். சங்கிரமகால கிரகஸ்திதியின் பலஞவது உலகத்தின் மத்திய கிழக்கு நாடுகளில் அரசுகளுக்குள் யுத்த ஆரவாரங்கள் ஏற்படும். ஆங்காங்கு ஆன்ருேர்களின் முயற்சியில் தர்மநியாயங்களில் சமரசமும் கட்டுப்பாடான நிலைமையும் ஏற்படும். தேசங்களில் அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி மலியும். தங்கம் வெள்ளி இவற்றின் விலை படிப்படியாகக் குறைந்து வரும். தேசங்களில் தெய்வநீதியாகச் செங்கோல் ஆட்சி நடைபெறும். மக்கள் தொழில்வளம் பெருக்கிப் பொருளாதார முன்றேற்றமடைவர். எங்கும் சுபிட்சம் நிலவும்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் இறைவன் கட்டளையின்படி வந்துள்ள சிவஞான குருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் சிஷ்யகோடியாகிய அவம் மாசு இல்லாத தூய ஞான புத்திரர்களுக்கு ஞானதீட்சை செய்தருள்வார்கள். அன்ஞர் புனித திருவாய்மலர்ந்து லோகத்திற்கு மனுநீதி தர்ம பரிபாலன முறையினையும் சிவபூஜை நியமத்தின் உயர்வையும் எடுத்தியம்பி அருள் பாலிப்பார்கள். அத்தெய்விக மகான்களின் அறவழியில் இவ்வுலகம் இயங்கும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறு கால பூஜைகள் தெய்வ ஆராதனைகள் சிறப்பாகநடைபெறும். பிரஜைகள் எல்லோரும் தெய்வபக்தியுடையவர்களாகி க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

சூரிய கிரஹணம்

ஸ்ரீ சித்தார்த்தி௵ மாசிமீ 4உ (16—2—1980) ஸ்திரவாரம் அமாவாசை அவிட்டம் 3, 4-ஆம் பாதங்களில் சம்பவிக்கும் கேது கிரஸ்த கிருஷ்ணவர்ண சூரியோபராக புண்ணியகாலம். இது பூர்ண கிரஹணம் ஆயினும் நம் பிராந்தியங்களில் பார்சுவமாகத்தெரியும். கௌபேரபர்வா, பொதுவாகப்பரிமாணம் சற்றேறக்குறைய ¾ ஸ்பரிசம் சூரிய பிம்பத்தின் மேற்குக்குச் சற்றுத் தெற்கேதள்ளியும் மோட்சம் கிழக்குக்குத் தெற்கேதள்ளியும் ஏற்படும்.

கிரஹணம் சம்பவிக்கும் காலம்

இந்தியன் ஸ்டாண்டர்டு மணிப்படி

	ஸ்பரிசம் மணி - நி.	மோக்ஷம் மணி - நி.
சென்னையில்	2—22 P. M.	4—48 P. M.
திருச்சியில்	2—20 ,,	4—45 ,,
கன்னியாகுமரியில்	2—17 ,,	4—41 ,,
இராமேஸ்வரத்தில்	2—22 ,,	4—44 ,,

மற்ற இடங்களிலும் திரைராசிக கணிதப்படிக்கு ஸ்பரிச மோக்ஷ நேரம் சில நிமிஷ வித்தியாசத்தில் ஏற்படும்.

கிரஹணம் விடும்வரையில் போஜனம் சிரார்த்தம் கூடாது. மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், சதயம், பூரட்டாதி நக்ஷத்திரங் களில் பிறந்தவர் சாந்தி செய்துகொள்க.

1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபி விருத்தி யில் தன வருமானங்கள் நல்ல வகையில் வந்துகொண்டிருக்கும். அரிய காரியங்களில் முக்கியசெலவினங்களையும் செய்யும். மாதாவிற்கு வாயுபீடிதம் ஆகிச் சௌகரியம் ஆகும். பூர்வசொத்துப் பிராப்தியில் ஆதாயம் தரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் பிரசித்த மாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மாசி மாதம் 24உ 45 நாழிகை 31 விஞடி முதல் 27உ 5 நாழிகை 18 விஞடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். வித்துவத்துவத்தில் மாதமத்தியில் நல்லவெகுமதியைத்தரும். இயந்திர சாதனங்களின் கல்வி தொழில்துறைகளில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். மாசிமீ 27உ 5 நாழிகை 18 வினுடிமுதல் 29உ 18 நாழிகை 54 விநுடிவரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$

(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் இருப்பினும் பெரும் முதல்களில் சிக்கல்கள் இருந்து நீங்குவதாகும். பூமி இயந்திரங்களில் நற்பலன் வந்துசேரும். சகோதரரின் தொழில் துறைகளில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். மாதாவிற்குப் பித்தமயக்கம் நரம்பு வியாதி ஏற்பட்டு உடன் சௌகரியம் ஆகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். மாசிமீ 2, 3, 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல பண வருமானங்கள் ஏற்படும். செந்நெல் பிராந்தியில் நற்பலன் வந்துசேரும். சகோதரருக்கு அரசாங்க நன்மைகள் ஏற்படும். பொதுநலன்களில் ஈடுபாடும், அதனால் கியாதிபரவுதலும் ஆகும். அரசாங்க கௌரவப்பட்டம் நல்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். மாசிமீ 4உ 7 நாழிகை 27 விநுடி முதல் 6உ 13 நாழிகை 44 விநுடிவரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் கணிசமாக வந்துகொண்டிருக்கும். பந்துமித்திரர் சகோதரர் இவர்கள்நிமித்தம் செலவினங்களும்ஏற்படச் செய்யும். கண்வலி நகசுத்தி போன்ற உஷ்ணநலிவு ஏற்பட்டுக் குணமாகும். பூர்வசொத்தினின்றும் ஓரளவு நற்பலன் வந்துசேரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். மாசிமீ 6உ

13 நாழிகை 44 வினுடி முதல் 8உ 19 நாழிகை 50 விஞடிவரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

6. கன்னி :– உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானம் நல்ல கௌரவத்தில் வந்துகொண்டிருக்கும். சகோதரர் புத்திரர் சம்பந்தமான அவசிய செலவினங்களும் ஏற்படும். வீடுவாகனங்களின் பிராப்தியில் சௌகரியங்கள் நன்ருக இருந்து வரும். வித்தியா வியாபாராதி கலைத் துறைகளில் அரசாங்கத்தில் நன்மைகள் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் பிணக்கு வந்து பின் சுமுகமாகும். மாசிமீ 8உ 19 நாழிகை 50 விஞடிமுதல் 10உ 28 நாழிகை 2 விஞடிவரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

7. துலாம் :– சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் மூன்று விதங்களில் பணவருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளின் நலம் நன்ருக இருந்துவரும். வீடுவாகனங்களின் பிராப்தியில் சௌகரியங்கள் மேலாக இருந்து வரும். சிறியதந்தை அல்லது அண்ணன்மனைவிக்குத் தேகநலிவாகிக் குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நலமாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மாசிமீ 10உ 28 நாழிகை 2 விஞடிமுதல் 12 உ 40 நாழிகை 22 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் :– விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் நற்பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் தனதான்ய வருமானங்கள் திருப்தியளிக்கும். எழுத்துமூல விஷயங்களில் அரசாங்க காரியங்களில் நன்மதிப்பு தரும். ஜீவனோபாயத்தொழில்கள் மிடுக்காகவும் மதிப்பாகவும் நடைபெற்றுவரும் தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மாசிமீ 12உ 40 நாழிகை 22 விஞடிமுதல் 14உ 58 நாழிகை 24 விஞடிவரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு :– மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். பச்சை சிவப்பு

கற்கள் பதித்த ஆபரண பிராப்தியைத்தரும். சகோதரர் பெற்றோர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும், பசு பால்பிராப்தியைத்தரும். 19உ ஆனுல் புத்திரர் பௌத்திரர்களால் சந்தோஷ நிலைமையை உண்டு பண்ணும். மனைவிக்கு நரம்புத்தளர்ச்சி நலிவுவந்து உடன் குண மாகும். மாசிமீ 14உ 58 நாழிகை 24 விருடிமுதல் 17உ 22 நாழிகை 29 விருடிவரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வரவும் செலவும் சரிசமனுயிருந்துவரும். ஒப்பந்தம் தவணைகளில் இருக்கும் சிக்கல் நீங்கி நல்லன ஏற்படும். பந்துமித் திரர்கள் வருகையும் சந்துஷ்டியும் ஏற்படும். ஜீவனுேபாயத்தொழில் களில் 19உ முதல் முன்னேற்றம் காணும். தாரபுத்திரர்களின் சௌக் கியம் நன்ருக இருந்துவரும். மாசிமீ 17உ 22 நாழிகை 29 விருடி முதல் 19உ 50 நாழிகை 57 விருடிவரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பண வருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு உயர்வு தரும். வித்தியாவியாபாராதி கலைத் துறைகளில் பிரசித்தமும் நன்மை யும் ஏற்படும். 6உக்கு மேல் பசு பால் பிராப்தியை நல்கும். தாரபுத் திரர்களின் சௌக்கியம் நன்ருக் இருந்துவரும். மாசிமீ 19உ 50 நாழிகை 57 விருடிமுதல் 22உ 19 நாழிகை 55 விருடிவரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$– உத்திரட்டாதி – ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணச் செலாவணியில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். வீடுவாகனங்களில் மனைவியின் உடல் நலத்தில் செலவினங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். பூமிஇயந்திரங்களிலிருந்துநற்பலன்வரும். புத்திரர்களின் கல்வி தொழில் துறைகளில் முன்னேற்ற ஸ்திதியாக இருந்துவரும். மாசிமீ 22உ 19 நாழிகை 55 விருடிமுதல் 24உ 45 நாழிகை 31 விருடிவரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

மாசிமாதச் சிறப்பு நாட்கள்

13—2—80 புதன், விஷ்ணுபதி புண்யகாலம். திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம் கும்பரவி 3-45.

14—2—80 வியாழன், பிரதோஷம் மகாசிவராத்திரி மாயூரம் ஸ்ரீ காசி விஸ்வநாதருக்கு மகாபிஷேகம் சீகாழி ஸ்ரீ உமாமகேசருக்கு மூன்றும் காலத்தில் புழுகாப்பு.

15—2—80 வெள்ளி. போதாயன அமாவசை.

16—2—80 சனி, அமாவாசை துவாபரயுகாதி, சூரியகிரகணம்.

17—2—80 ஞாயிறு. கோச்செங்கட்சோழ நாயனர் குருபூஜை.

21—2—80 வியாழன், மாசி மக உற்சவாரம்பம்.

22—2—80 வெள்ளி கிருத்திகைவிரதம். வேளூர் தருமை ஸ்ரீ ஷண்முகர் கிருத்திகை.

28—2—80 வியாழன், பிரதோஷம்.

29—2—80 வெள்ளி, ஸ்ரீ நடராசர் அபிஷேகம். திருக்கடவூர் காலசங்கார மூர்த்திக்கு அபிஷேகம்.

1—3—80 சனி, **மகாமகம்** பௌர்ணமி விரதபூஜை. திருவையாறு திருக்குவளை கும்பகோணம் கஞ்சனூர் காஞ்சிபுரம் முதலிய தலங்களில் மகாமகதீர்த்தம் திருக்குவளை நெல் மகோற்சவம். மாதபூஜையில் கிருத கம்பளம்.

2—3—80 ஞாயிறு, வேளூர் 19, 20, 21 மூன்று நாட்களும் சூரியபூசை

4—3—80 செவ்வாய், வேளூர் சந்திரசேகரர் உற்சவாரம்பம். எறிபத்த நாயனர் குருபூசை.

5—3—80 புதன், தருமையாதீனம் 17 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை

9—3—80 ஞாயிறு, காளாஷ்டமி.

11—3—80 செவ்வாய், திருக்கடவூர் முனீஸ்வர பூஜை காரிநாயனர் குருபூஜை.

13—3—80 வியாழன், காரடையான் நோன்பு மீனரவி 52-9.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

I am very happy to have made a visit to the temple and I pray God for the good to all of us.

(S-d) Arokyasamy

28—12—79 R. D. O. Mayuram

"ஞானசம்பந்தம்" சந்தாதாரர்களுக்கு

தருமையாதீனத்திலிருந்து திங்கள்தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி, சிவஞானத்தேன் நிறைந்து, கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் "ஞானசம்பந்தம்" முப்பத்தெட்டு ஆண்டுகள் நிறைந்து முப்பத்தொன்பதாவது ஆண்டின் மூன்ரு வது இதழ் வெளிவருகிறது.

நேயர்கள் சிலர் இந்த ஆண்டுக்குரிய சந்தாத் தொகையை அனுப்பிவைக்காததால் தொடர்ந்து ஞானசம்பந்தம் அனுப்ப இயலாமல்போகிறது ஆகையால் சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆண்டுக் கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயனுறுவார்களாக.

ஆயுள் சந்தா செலுத்தினுல் அவர்களது வாரிசுகளும் "ஞானசம்பந்தம்" பெற வசதி செய்து தரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ கல்வி அறநிறுவனங்களுக்கோ மாற்றிக்கொடுக்க விரும்பினுல் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப் படும். இவ்வரியவாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயனடையுமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்கிருேம்.

ஆண்டுச் சந்தா (உள்நாடு)	...	ரூ.	9—00
ஆண்டுச் சந்தா (சிலோன்)	...	ரூ.	11—00
ஆண்டுச் சந்தா (வெளிநாடு)	...	ரூ.	17—00
ஆயுள் சந்தா (உள்நாடு)	...	ரூ.	100—00
ஆயுள் சந்தா (வெளிநாடு)	...	ரூ.	125—00

விளம்பரம்

பின் அட்டை வெளிப்பக்கம்	2-கலர்	ரூ	300—00
பின் அட்டை உட்பக்கம்	1-கலர்	ரூ	200—00
இதழின் உட்பக்கம்	,,	ரூ	100—00

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி:—

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் 609 001
தஞ்சை மாவட்டம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram at the Gnanasambandam Press. Dharmapuram Mayuram 10—2—80